Avoid to download from USER UPLOAD GROUP
If you want more free eBooks




Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# பரங்கிமலை இரயில் நிலையம்

சென் பாலன்

PARANGI MALAI IRAYIL NILAIYAM

SEN BALAN

2019

அட்டைப் பட வடிவமைப்பு : ராஜா ராமன்

எடிட்டிங் : இரவிசங்கர் அய்யாகண்ணு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# முன்கதை

“ மச்சான் என்னடா இப்படி வருது ? இந்த சைட் எல்லாம் பிளாக் ஆயிடுச்

“ ஆமாம் மச்சான் ...... இனிமே இதெல்லாம் வராது . கவர்மெண்ட் இதை பண்ணிட்டாங்க .”

“ இப்ப என்னடா பண்றது ?”

“ வி . பி . என் இன்ஸ்டால் பண்ணு மச்சான் . பிளாக்ட் சைட் எல்லாம் ஓ ஆகும் .”

“ வி . பி . என்னா ? எனக்கு அதெல்லாம் தெரியாதுடா . நீயே பண்ணிக் .”

----------------------------------

“ டேய் உன் மொபைல் ஒரு டுபாக்கூர் மொபைல்டா .

வி . பி . என் லோட் ஆக மாட்டேங்குது .”

" அப்ப என்னடா பண்றது . மச்சான் இதை பார்க்காம என்னால இருக்கவே முடியாதுடா . ப்ளீஸ் எதாச்சும் பண்ணுடா ."

“ ஒன்னு பண்ணலாம் . என் மொபைல்ல டவுன்லோட் பண்ணி உன் மொபைல்க்கு ஷேர் பண்றேன் . ஷேர்இட் ஆன் பண்ணு ."

“ தேங்ஸ்டா மச்சான் . நீ தான்டா உயிர் நண்பன் .”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks



Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் -1

"பயணிகள் கவனத்திற்கு; சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் வரைச் செல்லும் மின்தொடர்வண்டி ஒன்றாவது நடைமேடையில் இருந்து இன்னும் சற்று நேரத்தில் புறப்படும்" - ஒரே அறிவிப்பைத் திரும்பத் திரும்ப உலோகக் குரலில் நடைமேடையின் மேல் பொருத்தப்பட்டிருந்த ஒலிப்பெருக்கிக் கூவிக் கொண்டே இருந்தது.

திங்கள் கிழமைக்கென்று தனியாக ஒரு பரபரப்பு இருக்கிறது. பரங்கிமலை இரயில் நிலையம் முழுவதும் மக்கள் கூட்டம். வேலைக்குச் செல்வோர், வேலை இல்லாமல் செல்வோர் என பலதரப்பட்ட மக்கள். அனைவர் முகத்திலும் பதட்டம், கோபம், அவசரம். அனைவர் நடையும் ஓட்டம் கலந்த நடைதான். ஒருவர் கூட நிதானமாக நடக்கவில்லை.

இரயில்வே காவலர் வேகமாக நடைமேடையில் இருந்து இறங்கி கிண்டி செல்லும் திசையில் நடக்க, கார்த்திக் ஆல்டோவும் பின் தொடர்ந்தான். நடைமேடையைக் கடந்து சுமார் நூறு மீட்டர் தூரத்தில் அந்தக் கொடூரம் நடந்திருந்தது. பதினாறு வயது மதிக்கத்தக்க சிறு பையனின் உடல் தண்டவாளச் சுற்றுச் சுவருக்கும் இரயிலுக்கும் இடையில் பந்தாடப்பட்டு சிதைந்து கிடந்தது. அருகில் கிழிந்த புத்தகப்பை. சுற்றிலும் நோட்டு, புத்தகங்கள். தோனியின் ஸ்டிக்கர் ஒட்டிய பேனா பாக்ஸ்.

அருகில் பரங்கிமலை ஸ்டேசன் மாஸ்டரும், இரயில்வே இன்ஸ்பெக்டரும் நின்று கொண்டிருந்தனர். சுற்றிலும் கூட்டம். நெற்றியில்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

நாமம் போட்ட ஒரு ஒல்லி மனிதர் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

"கரப்ஷன் தான் சார் இந்தியாவை அழிக்கிறது. பாருங்கோ. கார்த்தாலே நிம்மதியா நேரத்துக்கு ஆபிஸ் போக முடியுதா? இதை எல்லாம் பார்க்கனும்னு என் நேரம். எல்லாம் கலிகாலம். பகவானே."

அவர் பரங்கிமலை இரயில் பயணிகள் நலச்சங்க தலைவராம். அப்படி ஒரு சங்கம் இருப்பதே ஆல்டோவிற்கு இப்போது தான் தெரிகிறது. அவர் மேல்சட்டைப் பையை துருத்திக் கொண்டு நிறைய காகிதங்கள் தெரிந்தன. கையில் ஒரு கருப்பு நிற டப்பர்வேர் பை. அவர் தொனியில் இருந்து இறந்த மனிதனுக்காக வருத்தப்படுவதை விட அலுவலகத்திற்கு தாமதமான கோபமே அதிகம் இருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது. கண்டிப்பாக நங்கநல்லூர்க்காரர் தான் என ஆல்டோ மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

“செக்கரட்டரியேட்டா?” காவலரின் காதுக்குள் ஆல்டோ கிசுகிசுத்தான்.

“இல்ல ஸ்டேட் பேங்க்”

அப்ப சரி தான், ஆல்டோ மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

"டி கிரேட் ஒர்க்கர் கூட யூனியன் வச்சிக்கிறா. வேலையே செய்றது இல்ல. எதைக் கேட்டாலும் யூனியன் சங்கம்னு மிரட்டுறா. ஹிட்லர் மாதிரி சர்வாதிகாரி வந்தா தான் இவாளுக்கு எல்லாம் சரிப்படும்" நலச் சங்கம் சத்தமாகப் பேசினார்.

"பிறகு எதற்கு நீங்க மட்டும் சங்கம் வச்சிருக்கீங்க?" என கூட்டத்தில் இருந்த ஒரு லைன் மேன் கோபமாகக் கேட்டார்.

அந்தப் பக்கம் திரும்பிய நலச் சங்கம், "அதைப் பற்றி எல்லாம் நீ பேசப்படாது. மட்டு மரியாதை வேணாம்? நான் இவாட்ட பேசுறேன். உங்கிட்ட எவன் பேசுவான்?" எனக் குரல் உயர்த்த அதற்குள் இரயில்வே கான்ஸ்டபிள்கள் இருவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"பையன் பேரு செல்வக் குமார். தாம்பரத்தில் இருந்து தியாகராய நகரில் இருக்கும் பள்ளிக்கு தினமும் இரயிலில் போய்ட்டு வருவானாம். இரயிலில் கூட வரும் நபர்கள் சொன்னாங்க. பெற்றோர் முகவரி கேட்டிருக்கோம். கிடைச்சிடும் " இரயில்வே இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் ஆரம்பித்தார்.

"எப்ப நடந்தது?" ஆல்டோ.

"காலையில் 8.45 எலக்ட்ரிக் ட்ரெயின் இன்னைக்கு 20 நிமிடம் லேட். அதனால் ரொம்பக் கூட்டமா வந்தது. சரியா 9.05க்கு இந்த இடத்தை கிராஸ் பண்ணுச்சு. அப்பதான் நடந்துச்சு."

"பொதுவா இந்த மாதிரி கேஸ் எல்லாம் இரயில்வே போலிஸ் நீங்க தானே எடுப்பீங்க? இந்த தடவை என்னை கூப்பிட்டுருக்கீங்க?" இரயில்வே இன்ஸ்பெக்டர் பாஸ்கரனிடம் ஆல்டோ கேட்டான்.

"கொஞ்சம் என் கூட வாங்க ஆல்டோ." நிலைய அதிகாரியையும் அழைத்துக் கொண்டு சென்றார் இரயில்வே இன்ஸ்பெக்டர் பாஸ்கரன்.

நிலைய அதிகாரி அறையில் இருந்த கணிணித் திரையில் நடைமேடையில் இருந்த ஒரு சிசிடிவி கேமரா பதிவு செய்த காட்சியை ஓட விட்டார்.

"இது நடைமேடையின் கடைசிப் பகுதியில் உள்ள மின்கம்பத்தில் பொருத்தப்பட்ட சிசிடிவி கேமரா. இதன் காட்சிகளை கவனமாகப் பாருங்கள்"

கொசு பறப்பது போல தெளிவில்லாமல் இருந்தது அந்த உள்சுற்று தொலைக்காட்சி காணொளி. ஆல்டோ கூர்ந்து கவனித்துப் பார்க்க ஆரம்பித்தான். அந்தக் கேமராவின் திசை நடைமேடையின் எதிர்ப்புறம் அமைந்திருந்தது. அதனால் தண்டவாளப் பகுதி மட்டுமே தெரிந்தது. இரயில் நிலையம் தெரியவில்லை. மின்சார இரயிலின் முதல் பெட்டி மெதுவாக அந்தக் கேமராவைத் தாண்டிச் சென்றது. அதன்பின் மற்ற பெட்டிகள் செல்லச்செல்ல சீராக வேகம் அதிகரித்துக் கொண்டே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

சென்றது. அனைத்துப் பெட்டிகளிலும் படிகளில் பயணிகள் தொங்கிக்கொண்டு பயணம் செய்தனர். திடீரென ஒரு பெட்டியில் இருந்த ஒரு பயணி தண்டவாள சுற்றுச் சுவரில் மோதி கிழே விழுந்தார்.
நிலைய அதிகாரி அந்த வீடியோவை நிறுத்தி விட்டு பேச ஆரம்பித்தார்.

"நான்கு மாதத்திற்கு முன் நீங்க செய்திகளில் எல்லாம் படிச்சிருக்கலாம். பரங்கிமலை இரயில் நிலையத்தில் சுவரில் மோதி பயணிகள் பலி என. அது பெரிய பிரச்சனை ஆன பிறகு அந்த நடைமேடையையே மாற்றி அமைத்தோம். பொதுவாக அந்த நடைமேடையில் மின்சார இரயில்களை நாங்கள் இயக்குவது இல்லை. மற்ற பாதைகளில் ஏதேனும் பிரச்சனை உள்ள போது மட்டுமே இயக்குவோம். அப்படி இயக்கும் போது, இதுவரை எந்தப் பிரச்சனையும் ஏற்படவில்லை. படியில் பயணம் செய்தால் கூட சுவரில் மோத வாய்ப்பே இல்லை. தற்போது அந்தளவு இடைவெளி உள்ளது. சொல்லப் போனால் மாற்றத்திற்குப் பிறகு ரெகுலர் ட்ராக்கைவிட இந்த ட்ராக் மிகவும் பாதுகாப்பாகிவிட்டது."

அருகில் இருந்த இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் தொண்டையைச் செருமிவிட்டு "இதனால் எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு அந்த வீடியோவை மீண்டும் மீண்டும் பார்த்தோம்" என்று வீடியோவை சிறிது ஜூம் செய்து பெரிதாக்கி மிக மெதுவாக ஓடவிட்டார்.

சரியாக அந்தப் பயணி விழுவதற்கு முன், ஷூ அணிந்த ஒரு கால் மிக வலுவாக அவரை இடுப்பில் உதைத்தது. ஒரு நொடி நிலை தடுமாறியப் பயணி பிடி நழுவி ஸ்லோ மோசனில் சுவரில் மோதி கீழே விழுவது தெரிந்தது.

திட்டமிட்டக் கொலை. ஒரு நொடி வீடியோக் காட்சி ஆல்டோவின் மொத்த மனநிலையையும் மாற்றியது.

"மீனம்பாக்கம் கிட்ட சிக்னல் பிரச்சனை. அதனால் எல்லா ட்ரெயினும் லேட். இந்த ட்ரெயினும் லேட்டா வந்ததால எப்பவும் போற ரெகுலர்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

ட்ராக்ல போகாம இந்த பிளாட்பார்மில் போனது. இதைப் பயன்படுத்தி யாரே திட்டம் போட்டு கொலை செய்திருக்காங்க. இதை எங்க ஐஜி கிட்ட சொன்னோம். அவர் தான் உங்களையும் இன்வால்வ் பண்ணுனது." இரயில்வே இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் கூறினார்.

“இது எங்களுக்கு பெரிய பிரச்சனை. ஏற்கெனவே சுவரில் மோதி நிறையப் பேர் இறந்தது பெரிய இஸ்யூ ஆச்சு. இப்ப தான் நிறைய செலவு பண்ணி எல்லாம் மாத்தி வச்சிருக்கோம். திரும்பவும் மீடியாவிற்கு எங்களால பதில் சொல்ல முடியாது.” ஸ்டேசன் மாஸ்டர் கூறினார்.

சிறிது யோசனைக்குப் பிறகு ஆல்டோ கூறினான் " நீங்க சொல்றது கரெக்ட் தான். ஆனால் இது ரொம்ப சிக்கலான கேஸ். இப்போதைக்கு இது மர்டர்ன்னு யாருக்கும் தெரிய வேண்டாம். விபத்து மாதிரியே வெளியில் தெரியட்டும். கூடிய சீக்கிரம் கண்டுபிடிச்சுருவோம்.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 2

2018 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை அறிக்கையின் படி உலகம் முழுவதும் சுமார் 30 கோடிப் பேர் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். 20 கோடிப் பேர் கனாபிஸ் எனப்படும் கஞ்சா வகைகளைப் பயன்படுத்துகின்றனர். மீதம் உள்ளவர்கள் ஓப்பியம், கோகெயின் மற்றும் சிந்தெடிக் போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர்.

இராயப்பேட்டை. அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிணவறை. ஆல்டோவும் இன்ஸ்பெக்டர் பாஸ்கரனும் மகிந்த்ரா பொலிரோவில் இருந்து இறங்கி பிணவறை நோக்கி நடந்தனர். வாசலில் பெருங் கூட்டம் இருந்தது. நான்கு அல்லது ஐந்து இடங்களில் தனித்தனியாக கும்பல் கும்பலாக அழுது கொண்டிருந்தனர்.

"சிட்டியில் மட்டும் தினமும் குறைஞ்சது பத்து பேர் ஆக்சிடெண்ட்டில் சாகுறாங்க. அவங்க பொண்டாட்டி புள்ளை எல்லாம் அழுகுறதைப் பார்த்தால் பாவமா இருக்கு. வேற வியாதில யாராவது ஒரு ஆள் செத்தா இந்தப் பேப்பர்காரனும் டிவிக்காரனும் அப்படி கூவுறானுங்க. டெய்லி இங்க பத்து பேர் சாவுறாங்க. ஒருத்தனும் கண்டுக்கிறது இல்ல. ஒரு வாரம் இந்த மார்ச்சுவரிக்கு தினமும் வந்தாப் போதும். எல்லாரும் ஒழுங்கா வண்டி ஓட்டுவாங்க." கூட வந்த வயதான கான்ஸ்டபிள் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இறந்த மாணவன் செல்வக் குமாரின் பிணக்கூறாய்வு விண்ணப்பத்தை மருத்துவமனை அலுவலகத்தில் அளித்துவிட்டு வெளியே ரிலாக்ஸாக காத்திருந்த இரயில்வே கான்ஸ்டபிள் வேகமாக வந்து சல்யூட் அடித்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"அந்தப் பையன் ஃபேமிலியில் யாராவது வந்திருக்காங்களா?" பாஸ்கரன் வினவினார்.

"அங்க இருக்காங்க சார்." அவர் காட்டிய திசையில் பத்து பேர் அமர்ந்து அழுது கொண்டிருந்தனர். நடுநாயகமாக அமர்ந்திருந்த பெண்மணியின் முகம் அழுது வீங்கியிருந்தது. அந்தப் பையனின் அம்மாவாக இருக்க வேண்டும். அருகில் ஸ்கூல் யூனிபார்ம் அணிந்த ஒரு பையன் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். அவர்களைச் சுற்றிலும் பெண்கள் கூட்டம். ஆண்கள் சற்றுத் தள்ளி நின்றனர்.

“பி.எம் (போஸ்ட் மார்ட்டம்) முடிய இன்னும் எவ்வளவு நேரம் ஆகும்?"

"பதினோரு மணிக்கெல்லாம் இன்கொஸ்ட் கொடுத்தாச்சு சார். இப்ப நம்ம கேஸ் தான் போயிட்டு இருக்கு. மூணு மணிக்குள்ள பாடி கிடைச்சிடும். நாளைக்கு புரோவிசனல் ரிப்போர்ட் வந்திடும்"

"பேமிலிகிட்ட பேசிப் பார்க்கலாமா?" ஆல்டோ.

"வாங்க சார்" என கான்ஸ்டபிள் அழைத்துச் சென்றார். தங்களை நோக்கி போலிஸ் வருவதைக் கண்டதும் ஆண்களில் சிலர் முன்னால் வந்தனர். அழுது சிவந்த கண்களுடன், பேண்ட் சட்டை போட்டு நின்ற ஒருவரைக் காட்டி "இவர்தான் பையனோட அப்பா சார்" என அறிமுகப்படுத்தினார் கான்ஸ்டபிள்.

ஆல்டோவிற்கு எப்படி ஆரம்பிப்பது எனத் தெரியவில்லை. மேற்கத்திய நாடுகளில் எல்லாம் we are sorry for your loss என ஒரு வரியில் முடித்து விட்டு விசாரணையைத் துவக்கிவிடுவர். ஆனால் நம் நாட்டில் அதெல்லாம் ஒத்துவராது.

"இன்னும் கொஞ்ச நேரத்தில் போஸ்ட்மார்டம் முடிஞ்சிரும். கவர்மெண்ட் மார்ச்சுவரி வேன் நாங்களே அரேஞ்ச் பண்ணிட்டோம். எங்க எடுத்திட்டுப் போறிங்க?" எப்படியோ ஆரம்பித்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"காஞ்சிபுரம் மாவட்டம், ஆலப்பாக்கம் தான் சொந்த ஊர். அங்க போறோம் சார்."

"நீங்க என்ன பண்றீங்க?"

"முன்னாடி பாண்டிபஜார் பிளாட்பார்ம்ல துணிக்கடை வச்சிருந்தேன். இப்ப அங்கயே ஒரு கடையில் வேலை பார்க்கிறேன்."

"வீடு தாம்பரமா?"

"போன வருசம் வரை திநகர்லதான் இருந்தோம். வாடகை கட்டுபடி ஆகல. ஒரு வருசம் முன்னால் தான் முடிச்சூர்க்கு மாறுனோம்."

"ஓ. அதுனால தான் பையன் திநகர் ஸ்கூல்ல படிக்குறானா?"

"ஆமா சார். பாதி வருசத்தில மாறுனதால தாம்பரம் பக்கத்தில் எங்கயும் அட்மிசன் கிடைக்கல. அப்ப ட்ரெயின்ல போக ஆரம்பிச்சான். இந்த வருசம் மாத்தலாம்னு நினைச்சப்போ ப்ரெண்ட்ஸ் எல்லாம் இங்க தான் இருக்காங்க. ட்ரெயின் வசதியாக இருக்கு. இந்த ஸ்கூல்லயே படிக்குறேன்னு மாற மாட்டேன்னு சொல்லிட்டான்."

"தினமும் ட்ரெயினில் தான் வருவானா?"

"முடிச்சூரில் இருந்து தாம்பரம் ஷ்டேசன் வரை ஷேர் ஆட்டோவில் வருவான். அங்க இருந்து ட்ரெயின். திரும்ப மாம்பலம் ஸ்டேனில் இருந்து ஷேர்ஆட்டோ. இப்படி அநியாயமா ட்ரெயினில் அடிபட்டு சாவான்னு நினைச்சிருந்தா எப்பவோ ஸ்கூலை மாத்தியிருப்பனே" பேசிக்கொண்டே இருந்தவர் திடீரென குலுங்கிக் குலுங்கி அழுக ஆரம்பித்தார்.

இதற்கு மேல் பேசுவது சரியில்லை என நினைத்த ஆல்டோ இன்ஸ்பெக்டர் பாஸ்கரனின் முகத்தைப் பார்த்தார். அவரும் புரிந்து கொண்டு நடக்க ஆரம்பிக்க அனைவரும் பின்தொடர்ந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 3

உலகம் முழுவதும் நான்கு இலட்சத்து இருபது ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் ஓப்பியம் பயிரிடப்படுகிறது. மனித வரலாறிலேயே இதுவரை உற்பத்தி செய்யப்பட்டதில் அதிக அளவாக 2017 ஆம் ஆண்டு பத்தாயிரத்தி ஐநூறு டன் ஓப்பியம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

எழும்பூர், மாநில குற்றத் தடுப்பு இயக்குநர் அலுவலகம். கார்த்திக் ஆல்டோ இயக்குநரின் கதவைத் தட்டி விட்டு அனுமதிக்காக காத்திருந்தான். "கெட் இன்" என அவரது அழைப்பு கேட்டதும் உள்நுழைந்தான்.

இந்நிலையில். ஆல்டோ பற்றி ஒரு சுருக்கமான அறிமுகம் (முந்தைய நாவலான சிரம் தர விரும்பு நாவலில் விளக்கமாக வந்துள்ளது) இந்திய ஒன்றியத்தின் குடிமைப் பணித் தேர்வுகளில் தவறியபின், தமிழ்நாட்டின் க்ரூப் ஒன் தேர்வின் மூலம் டிஎஸ்பியாக தேர்ச்சி பெற்றான். ஐக்கிய முடியரசின் (United Kingdom) எடின்பரோ பல்கலைக்கழகத்தில் கிரிமினாலஜி ஹானர்ஸ் முடித்து தற்போது மாநில குற்றத் துப்பறிவு மற்றும் தடுப்புப் பிரிவு ஒருங்கிணைப்பாளராக உள்ளான். மாநிலம் முழுவதும் இருந்து சிக்கலான, தீர்க்கப்படாத வழக்குகள் இவர்களது பிரிவிற்கு மாற்றப்படும்.

"உட்காருங்க கார்த்திக்" பெரும்பாலானோர் கார்த்திக் ஆல்டோவை, “ஆல்டோ” என அழைத்தாலும் இயக்குநர் அருள்மொழி, எப்போதும் கார்த்திக் என்று தான் அழைப்பார்.

"சார், அந்த மவுண்ட் இரயில்வே ஸ்டேசன் கேஸ் பற்றி..."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"அதைப் பற்றி நானே பேச நினைத்தேன். இரயில்வே ஐஜி செந்தாமரைக் கண்ணன் எனக்கு ஐபிஎஸ் பேட்ச்சில் சீனியர். எனக்கு நல்ல நண்பரும் கூட. அவர் போன் பண்ணி இந்த கேஸ் ஆக்சிடெண்ட் இல்ல மர்டர்ன்னு நினைக்கிறேன், இன்வெஸ்டிகேசனுக்கு உதவி பண்ண முடியுமான்னு கேட்டார். நான் தான் உங்களைப் பற்றிச் சொல்லி அனுப்பி வச்சேன். நீங்க என்ன நினைக்குறீங்க? அந்த கேஸை நம்ம எடுக்கலாமா?"

"சிசிடிவி வீடியோ பார்த்தால் தெளிவாகத் தெரியுது சார். அது கொலை தான். கேஸ்ல எந்த லீட், க்ளூவும் இதுவரை இல்லை. சேலஞ்சிங் கேஸ் தான். ஆனால் நம்ம எடுக்கலாம் சார். நல்ல டீம் ஃபார்ம் பண்ணி விசாரணையைத் தொடங்கினா சீக்கிரமே கண்டுபிடிச்சிடலாம்."

"ஓகே கார்த்திக். இது நம்ம கௌரவ பிரச்சனை. நம்ம திறமையை மதிச்சு வந்திருக்காங்க. பெர்ஃபாமென்ஸ் சரியில்லைனா சிபிசிஐடி, சிபிஐ எனப் போறதுக்கும் வாய்ப்பு இருக்கு. ஏன்னா அந்த இடத்தில் சமீபத்தில் தான் ஒரு பெரிய விபத்து நடந்து இரயில்வேக்கு கெட்ட பெயர். அதனால, இது விபத்தில்லை, கொலைன்னு நிரூபிக்க இரயில்வேத் துறையே மும்மரமா இருக்கு. உங்க டீம்க்கு யார் வேணுமோ எடுத்துக்கோங்க. பட் ஐ வாண்ட் ரிசல்ட்."

"ஐ அண்டர்ஸ்டேன்ட். தேங்க்யூ சார்."

ஆல்டோ மிகக் கவனமாக சிறப்புக் குழுவைத் தேர்வு செய்தான். உதவி ஆய்வாளர்கள் கோபிநாத் மற்றும் திரு என்கிற திருநாவுக்கரசு இருவருடன் ஏழு காவலர்கள் அடங்கிய தனிப்படை தயாரானது. கோபிநாத் ஏற்கனவே ஆல்டோவுடன் பல வழக்குகளில் பணியாற்றியவர், இளைஞர். ஆல்டோவின் மன ஓட்டத்தை சட்டென உணர்ந்து செயல்படுபவர். திரு, சென்னையின் பல காவல்நிலையங்களில் பணிபுரிந்தவர். உள்ளூர் சூழ்நிலையை அறிந்தவர். சந்து பொந்துகளில் கூட புகுந்து வரக்கூடியவர். ஆல்டோவுடன் சேர்த்து மொத்தம் பத்து பேர் கொண்ட குழு.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

பவர்பாயிண்ட் பிரசன்டேசனை ஓடவிட்டபடி பேச ஆரம்பித்தான் ஆல்டோ.

"இந்த கேஸ் மத்த எல்லா கேசை விடவும் ரொம்ப வித்தியாசமானது. ஓடுற ரயிலில் நடந்ததால கிரைம் சீன் எவிடன்ஸ் நமக்கு எதுவுமே இல்லை. நேரில் பார்த்தவர்களும் யாரும் இல்லை. சொல்லப்போனா யாருக்குமே கொலை என்று கூடத் தெரியாது."

இரயில் நிலையத்தில் எடுக்கப்பட்ட சிசிடிவி வீடியோவை ஸ்லோ மோசனில் ஓடவிட்டான். சரியா அந்தக் கால் உதைக்கும் இடம் வந்ததும் நிறுத்தினான்.

"இந்த ஒற்றை ஷூ கால் வீடியோ மட்டும் தான் இப்ப வரை நமக்கு கிடைச்சிருக்க ஆதாரம். இந்த கேசை எப்படி கொண்டு போறதுன்னு உங்க யோசனைகளைச் சொல்லுங்க."

"எந்த க்ளூவும் இல்லாத கேசை மோட்டிவ் வச்சு அணுகலாம் சார்." கோபிநாத் கூறினார்.

"வெரிகுட். பிடிமானமே இல்லாத கேஸ்ல மோட்டிவ் வச்சு யாருக்கு இந்த கொலையால் இலாபம் அல்லது இவர்மீது யாருக்கு கோபம் அப்படின்னு போனா 90% சக்ஸஸ் ஆகும்."

"மோட்டிவ் இல்லாம நடந்திருந்தா?" திரு கேட்டார்.

"அப்படி நடந்திருந்தா அது சைகோ கில்லராத்தான் இருக்கனும். அது பெரிய தலைவலி. அப்படி இருந்தா இந்த ஒரு கொலையோட நிற்காது."

எல்லாரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அப்படி இருக்கக்கூடாது என அனைவருக்கும் எண்ணம்.

“இந்த வழக்கு நம்ம அனைவருக்குமே கொஞ்சம் சவாலான வழக்கு தான். கோபி, நீங்க அந்தப் பையன் கூட இரயிலில் பயணம் செஞ்சவங்களை விசாரிங்க. திரு, நீங்க போஸ்ட்மார்ட்டம் என்னாச்சுன்னு ரிப்போர்ட் பாருங்க. தாம்பரம் ஸ்டேசன், மவுண்ட் ஸ்டேசன் ரயில்வே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

போலிஸ் கிட்டப் பேசிப்பாருங்க. எல்லா ஸ்டேசன் சிசிடிவி வீடியோக்களும் வேண்டும். நான் அந்தப்பையன் வீட்டுக்கு போய் விசாரணை பண்றேன்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 4

இந்தியாவில் ஆண்டிற்கு 17 டன் ஹெராயின் பயன்படுத்தப்படுகிறது. ஐந்து இலட்சம் பேர் ஹெராயினுக்கு அடிமையாக உள்ளனர்.

இறந்துபோன மாணவன் செல்வக்குமாரின் வீடு தாம்பரத்தில் இருந்து முடிச்சூர் செல்லும் வழியில் பிரதான சாலையில் இருந்து உள்ளே சற்று தூரத்தில் இருந்தது. ஆல்டோவின் கார் சிரமப்பட்டு தான் அந்தத் தெருவில் நுழைந்தது.

சிறிய ஓட்டு வீடு. போனால் போகுது என இரு பிளாஸ்டிக் நாற்காலிகள் உயிரோடு இருந்தன. ஆல்டோ பயந்து கொண்டே தான் அமர்ந்தான். எதிரில் இருந்த மற்றொரு நாற்காலியில் செல்வக்குமாரின் தந்தை அமர்ந்தார். அவனது அம்மாவும் சகோதரனும் உள் அறையில் இருந்து எட்டிப் பார்த்தனர்.

"எனக்கு ரெண்டு பசங்க சார்" செல்வக்குமாரின் தந்தை தனசேகரன் பேச ஆரம்பித்தார். "மூத்தவன் செல்வக்குமார். பதினொன்னாவது படிச்சான். ரெண்டாவது சதீஷ்குமார். ஒன்பதாவது படிக்குறான்."

"நீங்க முன்னாடி தனியாகக் கடை வச்சிருந்தீங்களா?"

"ஆமா சார். மூணு வருசம் முன்னாடி வரை தனியாகத் தான் கடை வச்சிருந்தேன். பாண்டி பஜார் பிளாட் பார்ம்ல, ரத்னா ஸ்டோர் பாத்திரக் கடை வாசல்ல இருந்துச்சு நம்ம துணிக்கடை. லெக்கின்ஸ், டீசர்ட், சுடிதார் மெட்டீரியல் எல்லாமே."

"ஏன் அதை மூடுனீங்க?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"நல்லா தான் போயிட்டு இருந்துச்சு சார். ஒரு தடவை ரூவா நோட்டெல்லாம் செல்லாதுன்னு சொன்னாங்கள்ள, அப்ப ரெண்டு மாசம் சுத்தமா யாவாரமே இல்ல. வட்டிக்கு வாங்கி தான் கடை நடத்துனேன். ரெண்டு மாசமா வட்டியும் கட்டமுடியாம வருமானமும் இல்லாம ரொம்ப சிக்கலாயிடுச்சு. திரும்பவும் பழைய யாவாரம் வரவே இல்ல. அதுக்கு முன்னால ஒரு நாளைக்கு பத்தாயிரம் யாவாரம் ஆகுறது, அதுக்கு பிறகு ரெண்டாயிரத்துக்கு கூட ஆகல. எவ்வளவோ முயற்சி பண்ணியும் ஒன்னும் முடியல. வட்டிக்கு மேல வட்டி கட்ட முடியல. அதான் கடையை வித்து கடனை எல்லாம் அடைச்சிட்டு வேலையில் சேர்ந்துட்டேன்."

"இப்பவும் யாராவது கடன்காரங்க தொல்லை பண்றாங்களா?"

"என் மச்சாங்காரனுக்கு மட்டும் தான் நாலு லட்சம் கொடுக்கனும் சார். அவன் மெதுவா தாங்கன்னு சொல்லிட்டான்."

"செல்வக்குமார் எப்படி? அவனால எதுவும் பிரச்சனை வருமா?" அருகில் நின்ற செல்வக்குமாரின் தாயாரிடம் கேட்டான் ஆல்டோ.

"ரொம்ப வருசம் கழிச்சு பிறந்த பையன்ங்கிறதால செல்லம் ஜாஸ்தி. படிப்பு சொல்லிக்கிற அளவு இல்ல சார். வீடு தங்காம ஊரைச் சுத்துவான். ப்ரெண்ட்ஸ் அதிகம். ஆனா அவனால இதுவரை எந்த பெரிய பிரச்சனையும் வந்ததில்லை. அதுக்கு அப்படியே எதிர்பக்கம் என் ரெண்டாவது பையன். நல்லா படிப்பான். எப்பவுமே பர்ஸ்ட் ரேங்க் தான். வீட்டை விட்டு வெளிலயே போக மாட்டான்."

"இரயில்வேத் துறையில் இருந்து இழப்பீடு தர்றதா சொல்லிருக்காங்க. கவலைப்படாதீங்க. அதுக்கு என்னால முடிஞ்ச உதவியை நான் செய்யுறேன்"

"ரொம்ப நன்றி சார்."

"அதுக்கு முன்னாடி உங்ககிட்ட ஒரு முக்கியமான விசயம் பேசனும். உங்க பையனை யாராவது ட்ரெயினில் இருந்து தள்ளி விட்ருப்பாங்கன்னு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

நாங்க சந்தேகப்படுறோம். இப்போதைக்கு இதை வெளியில் சொல்ல வேண்டாம். இரகசியமா விசாரிச்சிட்டு இருக்கோம்."

மூவரும் அதிர்ச்சியானார்கள். செல்வக்குமாரின் அம்மா விசும்ப ஆரம்பித்தார். திடீரென பெருங் குரலெடுத்து அழுக ஆரம்பித்தார். அழுகைச்சத்தம் கேட்ட சிறிது நேரத்தில் வீட்டிற்கு வெளியே இரண்டு மூன்று பெண்கள் கூடி விட்டனர்.

ஆல்டோ செய்வதறியாது செல்வக்குமாரின் தந்தையைப் பார்த்தான். ஆல்டோவின் நிலையை புரிந்து கொண்ட அவர் "செத்த நேரம் சும்மா இருக்கியா?" என மனைவியை அதட்டினார். பின்பு வாசலை நோக்கி வந்து "ஒன்னுமில்லை. போலிஸ் வந்திருக்காங்க. பையனைப் பத்தி பேசுன உடனே அழுகுறா. நீங்க கிளம்புங்க. நான் பாத்துக்கிறேன்" என சொன்னார். உச்சு கொட்டியபடி அவர்கள் கலைந்து சென்றனர்.

ஆல்டோ மீண்டும் குரலை சன்னமாக்கி கூறினான் "இதோ பாருங்கம்மா. எங்களுக்கு ஒரு சந்தேகம் தான். இன்னும் உறுதி ஆகல. சில ஆதாரம் கிடைச்சிருக்கு. விசாரணை பண்ணிட்டு இருக்கோம். அதுக்குள்ள நீங்க இப்படி பண்ணுனா விசயம் வெளிய தெரிஞ்சு கொலையாளி உஷாராக வாய்ப்பு இருக்கு." அவர் சேலை தலைப்பை வாயில் வைத்தபடி சத்தமில்லாமல் அழுதார்.

தனசேகரனிடம் திரும்பி "அதனால் தான் உங்ககிட்ட விசாரிக்கிறோம். உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் இருக்கா?"

"எனக்கு அதிர்ச்சியா இருக்கு சார். என்ன சொல்லன்னே தெரியல. கொலை பண்ற அளவுக்கு யாரோடயும் பிரச்சனை இல்லை சார்"

"நல்லா யோசிச்சுப் பாருங்க. பணப்பிரச்சனை, சொத்துப்பிரச்சனை வேறு ஏதாவது?"

செல்வக்குமாரின் தந்தை நெற்றியை சுருக்கி யோசிக்க ஆரம்பித்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"என் தம்பிக்கும் எனக்கும் பூர்வீக நிலம் சம்பந்தமா கொஞ்சம் பிரச்சனை இருக்கு சார். இப்ப பேச்சு வார்த்தை இல்லை. பத்து நாள் முன்னாடி பரம்பரை நிலத்தை எனக்கு தெரியாம விற்கப் பார்த்தான். நான் ஆளுங்களோடப் போய் அதைத் தடுத்திட்டேன். அப்ப கோவமா கத்திட்டு போனான். ஆனா அவன் இப்படிப் பண்ணுவான்னு நினைக்கல."

"அவர் இப்ப எங்க இருக்கார்? அட்ரஸ் போன் நம்பர் கொடுங்க."
ஒரு சிறிய பேப்பரில் எழுதிக் கொடுத்தார். அதை ஒருமுறை படித்துப் பார்த்து பத்திரமாக ஃபைலில் வைத்தான் ஆல்டோ.

"வேறு யாரோடாவது பிரச்சனை, தகராறு வேற எதுவும் இருக்கா?"

"இல்லை சார்."

"ஓகே. இது என் விசிட்டிங் கார்ட். எது தோணுனாலும் உடனே எனக்கு கால் பண்ணி சொல்லுங்க. சின்ன விசயமா இருந்தாலும் பரவாயில்லை. அதுல இருக்க நம்பருக்கு கால் பண்ணுங்க."

"ஓகே சார்."

"இன்னொரு முக்கியமான கேள்வி. உங்க பையன் செல்போன் வச்சிருந்தானா?"

"முன்ன வச்சிருந்தான் சார். ரெண்டு பேருக்குமே ஆளுக்கு ஒன்னொன்னு வாங்கிக் கொடுத்தேன். டச் ஃபோனு தான். ஆனா மூத்தவன் ஒரு மாசம் முன்னாடி தொலச்சுட்டான்."

"நான் கிளம்புறேன். எதுனாலும் எனக்கு கால் பண்ணுங்க."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 5

2017 ஆம் ஆண்டு இந்தியாவில் சுமார் மூன்று இலட்சம் கிலோ கஞ்சாப் பொருட்கள் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது ஐந்து ஆண்டுகள் முன்பு இருந்ததை விட 300% அதிகமாகும்.

ஒரு புத்தகம் எழுதும் அளவு தகவல்களுடன் உதவி ஆய்வாளர் கோபிநாத் வந்தார்.

“அந்த ட்ரெயின் தினமும் காலை 8.30க்கு தாம்பரத்தில் இருந்து கிளம்பி மவுண்ட் ஸ்டேசனை 8.45க்கு கிராஸ் பண்ணும். பாஸ்ட் ட்ரெயின்ங்கிறதால வேலைக்கு போறவங்க, பள்ளி, கல்லூரி மாணவர்கள் கூட்டம் எப்பவுமே நிறைய இருக்கும். அன்னைக்கு சிக்னல் கோளாறு காரணமாக எல்லா ட்ரெயினுமே லேட்டா தான் கிளம்பிருக்கு. மற்ற லோக்கல் ட்ரெயின் முதல் ட்ராக்ல போனதால இதை அந்த கடைசி ட்ராக்கிற்கு மாத்திருக்காங்க.”

“அப்ப பெரும்பாலும் தினசரி பயணம் செய்றவங்க தான் அதிகம். அப்படித்தானே?”

“ஆமா சார். அதுலயும் ஒரு பெக்யூலியாரிட்டி உண்டு. ஒவ்வொரு க்ரூப்புக்கும் ஒரு கோச் உண்டு. உதாரணமாக இன்ஜின்க்கு பின்னால் வரும் முதல் பெட்டியில் பயணம் செய்பவர்கள் எல்லா நாட்களிலும் அதில் தான் பயணம் செய்வார்கள். மாற்றி பயணம் செய்ய மாட்டார்கள். இரயில் நிலையத்தில் இருந்து இறங்கி அலுவலகமோ, வீட்டிற்கோ செல்ல ஏதுவாக கம்பார்ட்மெண்ட்டை தேர்ந்தெடுத்து வைத்துக் கொள்கிறார்கள். இப்படி தினமும் ஒரே பெட்டியில் வருவதால் அவர்களுக்குள் நல்ல

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

தொடர்பும் இருக்கிறது. உணவை பகிர்ந்து கொள்வது முதல், புதுப்படங்களை இணையதளங்களில் பதிவிறக்கி தங்களுக்குள் பரிமாறிக் கொள்வது, டப்பர்வேர், காய்கறிகள் போன்ற சிறிய பொருட்களை மொத்தமாக வாங்கி விற்பது என வியாபாரம் கூட நடக்கிறது. சிலர் மாதச்சீட்டு கூட நடத்துறாங்க."

"அப்ப இந்தப் பையனையும் நிறைய பேருக்கு தெரிந்திருக்கும்?"

"அந்த சிசிடிவி வீடியோவை வச்சி அவன் போன பெட்டி இரண்டாவதாக வர்ற பெண்கள்/முதல் வகுப்பு பெட்டிக்கு அடுத்த கம்பார்ட்மெண்ட் அப்படின்னு கண்டுபிடிச்சோம். தினசரி அந்த பெட்டியில் போற எல்லார்கிட்டயும் விசாரிச்சோம். பெரும்பாலும் அந்தப் பெட்டியில் வேலைக்குச் செல்வோர் தான் அதிகம். சில கல்லூரி மாணவர்கள் இருக்கின்றனர். இவன் ஒருவன் தான் பள்ளி மாணவன்.

சம்பவம் நடந்த அன்றைக்கு எல்லாரும் வேலைக்கு தாமதம் ஆகிவிட்ட பரபரப்பில் இருந்துள்ளனர். வழக்கத்தை விட சிறிது கூட்டமாக இருந்துள்ளது. அவன் விழுந்த சத்தம் கேட்ட பிறகு தான் விபத்து நடந்த விசயமே நிறையப் பேருக்கு தெரிந்துள்ளது. படியில் அவன் கூடப் பயணம் செய்தவர்களும் தற்போது வரை விபத்து அப்படின்னு தான் நினைக்குறாங்க.

எப்போதும் படியில் பயணம் செய்யும் சில கல்லூரி மாணவர்களை விசாரித்தோம். அம்பேத்கார் லா காலேஜ் ஸ்டுடண்ட்ஸ். அவர்களுடன் தான் அவன் தினமும் படியில் நின்று பயணம் செய்வானாம். புதுப் படங்களை தங்கள் மொபைல் போன்களுக்குள் ஷேர் செய்து கொள்வார்களாம். அன்று கூட்டம் நிறைய இருந்ததால் நிறைய பேர் படியில் நின்று கொண்டு வந்தார்களாம். இவன் விழுந்து இறந்தது அவர்களுக்கே அதிர்ச்சியாக உள்ளது. யாருக்குமே கொலை என சந்தேகம் இல்லை. நாங்களும் வெளிப்படுத்த வில்லை. வேறு எதுவும் குறிப்பிடத்தக்க வகையில் அன்று நடக்கவில்லை. ஆனால் இன்னொரு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

முக்கியமான க்ளூ கிடைத்துள்ளது சார்.”

"என்ன அது?" ஆல்டோ ஆர்வமாகக் கேட்டான்.

"சம்பவம் நடந்ததற்கு இரண்டு நாட்களுக்கு முன் அதேப்பெட்டியில் அந்தப்பையனுக்கும் வேறு ஒருவருக்கும் பயங்கரமான வாக்குவாதம், கைகலப்பு நிகழ்ந்துள்ளது. இருவரும் கட்டிப்புரண்டு சண்டை போட்டுள்ளனர். மற்ற பயணிகள் அவர்களை விலக்கி விட்டுள்ளனர். விபத்து நடந்த அன்று அந்த நபரும் இரயிலில் பயணம் செய்துள்ளார். ஆனால் அதன்பின் அவர் வருவது இல்லை."

"சூப்பர். நல்ல லீட். குட் ஒர்க் கோபி. ஆக, அவருக்கு மோட்டிவ் இருக்கு. வாய்ப்பும் இருக்கு. அந்த நபரை பற்றி வேறு தகவல் ஏதாவது தெரிந்ததா?"

"அவர் ஒரு மெடிகல் ரெப். சமீபத்தில் தான் இந்தப் பெட்டியில் வரத்தொடங்கியிருக்கிறார். தாம்பரத்தில் ஏறி எக்மோரில் இறங்குவாராம். திருநெல்வேலி தமிழில் பேசுவாராம். மாநிறம் நிறம், உயரமான உருவம். எக்ஸர்சைஸ் பண்ணுன ஜிம் பாடி."

"மெடிகல் ரெப் பெரும்பாலும் வேலைக்கு ஷூ தான் போட்டுப் போவாங்க. அவரோட பேரு, மொபைல் நம்பர் எதாவது கிடைச்சுதா?"

"பொதுவா யார்கிட்டயும் அதிகம் பழகாத நபராம். அவரது பெயரோ மொபைல் நம்பரோ யாருக்கும் தெரியவில்லை"

“இவர் நம்ம சஸ்பெக்ட் லிஸ்ட்ல முதல் இடத்தில் இருக்கார். கொலை செய்ய மோட்டிவ் இருக்கு. கொலை நடந்த இடத்தில் இருந்திருக்கார். இவரை பிடிச்சா நிறைய விசயம் க்ளியர் ஆகும்.”

"யெஸ் சார். ஆனா நம்ம கிட்ட இருக்கத் தகவல் எல்லாம் திருநெல்வேலி தமிழ் பேசுற மாநிற உயரமான ஆள். இதை வச்சு எப்படி இவ்வளவு பெரிய சிட்டியில் தேடுறதுன்னு குழப்பமா இருக்கு சார்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"எளிமையா யோசிங்க கோபி. கொலை பண்ணியாச்சு. யாருக்குமே சந்தேகம் வரலை. இதே நீங்களா இருந்தா என்ன பண்ணுவீங்க?"

"எப்பவும் போல இருப்பேன். வேலைக்கு போய்ட்டு வருவேன்."

"எக்ஸ்சாக்ட்லி. என் கணிப்பு என்னனா இப்பவும் அந்த நபர் வேலைக்குப் போய் வந்து கொண்டு தான் இருப்பார். தாம்பரத்தில் இருந்து எக்மோருக்கு. ஒரு வேளை சிட்டிபஸ்ஸில் போகலாம். இல்லையெனில் வேறு மோட் ஆப் ட்ரான்ஸ்போர்ட். நீங்க எதுக்கும் தாம்பரம் ஷ்டேசன்ல இருந்தே ஆரம்பிங்க. அடையாளம் காட்ட லா காலேஜ் பசங்க வருவாங்க தானே?"

“வருவாங்க சார். ஒன்னும் பிரச்சனை இல்லை.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 6

இந்தியாவின் உத்தர்கண்ட் மாநிலத்தில் தொழிற்சாலைப் பயன்பாட்டிற்காக கஞ்சா வளர்ப்பது சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

“செல்வக்குமாரோட சித்தப்பா அட்ரஸை வாட்ஸ் ஆப் பண்ணிருக்கேன். வண்ணாரப்பேட்டையில் துணிக்கடை வச்சிருக்கார். ரெண்டு ஃபேமிலிக்கும் இடையில் சொத்துத் தகராறு இருக்கு. அவரை விசாரிங்க திரு” செல்போனில் ஆல்டோவிடம் இருந்து தகவல் கிடைத்ததும் கிளம்பினார் திருநாவுக்கரசு.

வண்ணாரப்பேட்டை எம்.சி ரோடில் முக்கியமான இடத்தில் இருந்தது அவரது துணிக்கடை. சிறிய கடை தான். பல நிறங்களில் நைட்டிகளும் கைலிகளும் தொங்கிக் கொண்டிருந்தன.

காக்கிச் சீருடையைக் கண்டதும் கல்லாவில் இருந்தவர் எழுந்து நின்றார்.

"இங்க முத்துக்கிருஷ்ணன்?"

"நான் தான் சார்"

"உங்க கிட்ட கொஞ்சம் பேசனும்"

கடையில் இருந்த விற்பனைப் பெண்களிடம் ஆர்வம் கலந்த பதட்டம் ஏற்பட்டது. தங்களுக்குள் இரகசியமாக பேசிக் கொண்டனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"ரூம்ல பேசலாமா சார்?"

திரு சரி என்பது போல் தலையை அசைத்தார்.

"மாடிக்கு ரெண்டு காபி சொல்லிடுமா" என விற்பனைப் பெண்களைப் பார்த்து கூறிவிட்டு, "சார் காபி ஓகே தான? இல்ல டீ சொல்லட்டுமா?" என திருவிடம் கேட்டார்.

"அதெல்லாம் ஒன்னும் வேணாம்"

"பரவால்ல சார்" என்றபடி குறுகலான மாடிப்படியின் வழியே ஏறினார். மாடியில் ஒரு சிறிய அறை. ஒரு மேசை, இரு நாற்காலி தவிர மற்ற இடம் முழுவதும் பெரிய பெரிய துணி பண்டல்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இருவரும் அமர்ந்தனர்.

"சொல்லுங்க சார்?"

"உங்க அண்ணன் பையன் இறந்ததைப் பற்றி விசாரிச்சிட்டு இருக்கோம். அதுல கொஞ்சம் சந்தேகம் இருக்கு."

"நினைச்சேன் சார். அதுக்கு தான் வந்திருப்பீங்கன்னு. என் மாமாகிட்ட அண்ணி சொல்லுச்சாம். யாரோ தள்ளிவிட்டுட்டாங்கன்னு."

"உங்களுக்கும் உங்க அண்ணனுக்கும் என்ன பிரச்சனை?"

"எல்லா குடும்பத்திலயும் இருக்க பிரச்சனை தான். இடத்தகராறு"
சிறிது இடைவெளி விட்டவர் பிறகு கேட்டார்.

"நான் தள்ளிவிட்டேன்னு நினைக்கிறீங்களா சார்?"

"விசாரிக்க வேண்டியது எங்க கடமை. அதுக்காக உங்களை சந்தேகப்படுறோம்னு நினைக்கக் கூடாது."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"எங்க அண்ணி தான் சொல்லிருக்கும்னு நினைக்கிறேன். இடப்பிரச்சனை தான் சார்."

"பரம்பரை இடமா?"

"ஆமா சார். ஊர்ல இருக்கு. பத்து செண்ட். ஒழுங்கா பாதை கூட கிடையாது. பாதை இருந்தா இன்னைக்குப் பல லட்சம் போகும்."

"ரெண்டு பேரும் இன்னும் பாகம் பிரிச்சுக்கலையா?"

"பாகம் எல்லாம் பிரிச்சு பல வருசம் ஆச்சு சார். ஆளுக்கு அஞ்சு செண்ட். நான் என் பங்கை விற்க முயற்சி பண்ணுனா விட மாட்றாங்க?"

"ஏன்?"

"எங்கப்பா சின்ன வயசுலயே தவறிட்டார். எங்க அண்ணன் தான் படிக்க வச்சுச்சு. நான் இல்லைன்னு சொல்லல. அதுகிட்ட தொழில் கத்துகிட்டு தான் நான் தனியாகக் கடை போட்டேன்."

காபி வந்தது.

"அவங்க யாவாரம் நொடிச்சுப் போச்சு. எனக்கு ஏதோ கொஞ்சம் போகுது. லோன் போட்டு இந்த இடத்தை வாங்கி இப்ப சொந்தமா கடை வச்சிருக்கேன்."

"ம்."

"நாங்க தான உன்னைப் படிக்க வச்சோம். இப்ப நீ நல்லா இருக்க. அந்த இடத்தை எங்களுக்கு கொடுன்னு எங்க அண்ணி கேக்குது. எப்படி சார் முப்பது லட்சம் இடத்தை அவங்களுக்கே கொடுக்க?"

"உங்க பங்கு முப்பது லட்சமா?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"இல்ல சார். மொத்த இடம் முப்பது லட்சம். என் பங்கு பதினஞ்சு லட்சம்."

"ஓகே." கையில் வைத்திருந்த டையரியில் குறித்துக் கொண்டார்.

"எனக்கு ரெண்டு பொண்ணுங்க இருக்காங்க சார். நாளைக்கு கல்யாணம் காட்சி பண்ணனும்னா, மொத்தமா இவங்ககிட்ட கொடுத்திட்டு நான் என்ன பண்ண? சரி வளர்த்தவங்களாச்சே. இப்ப கஷ்டப்படுறாங்க. இடத்தை வித்தா பதினஞ்சு லட்சம் வரும். அதுல பத்தை நான் எடுத்துக்கிறேன்; அஞ்சு லட்சம் உங்களுக்கு தர்றேன் அப்படின்னும் சொன்னேன். அதுவும் முடியாதாம். மொத்த இடமும் வேணும்னு கேக்குறாங்க."

"போன வாரம் விற்க முயற்சி பண்ணீங்களா?"

"ஆமா சார். வேலூர் பார்ட்டி. ரெடி கேஷ். எனக்கும் ஜிஎஸ்டி அது இதுன்னு பிஸினஸ் டல். பணமுடக்கம். சம்பளம் கொடுக்கவே சிரமம். ரொட்டேசனுக்கு பணம் தேவைப்படுது. அதான் விக்கலாம்னு நினைச்சேன். அதுக்குள்ள எங்க அண்ணன் வந்து பிரச்சனை பண்ணி கெடுத்துடுச்சு. செம கடுப்பு. அவங்களை மீறி விக்குறது ஒன்னும் பெரிய விசயமில்லை. வளர்த்த மரியாதைக்காக பார்க்குறேன். இதனால என் வீட்லயும் சண்டை."

"அதுனால உங்க அண்ணன் கூட சண்டை போட்டீங்களா?"

"நீங்களே சொல்லுங்க சார். அஞ்சு லட்சம் என் பாகத்தில் இருந்து தர்றேன்னு சொல்றேன். முடியாது மொத்தமா கொடுன்னு சொன்ன யாருக்கு தான் கோபம் வராது?"

"போன திங்கள் கிழமை எங்க இருந்தீங்க.?"

"போன திங்கள் கிழமை... கொள்முதலுக்காக திருப்பூர் போயிருந்தேன்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

செல்வா இறந்த நீயூஸ் கேள்விப் பட்டு பாதியிலேயே வந்தேன்.”

"எங்க தங்கியிருந்தீங்க? எதாவது ரசீது இருக்கா?"

"கோ ஐபிபோல தான் புக் பண்ணேன். பில் இருக்கு.
சார், எனக்கும் அண்ணனுக்கும் பிரச்சனை இருக்கது உண்மை தான். ஆனால் கொலை பண்ற அளவுக்கு எல்லாம் இல்ல. நீங்க என்னை விசாரிக்கிறதை விட வேற பக்கமும் பார்த்தா நல்லா இருக்கும்.”

தனது மேசையில் இருந்த கம்ப்யூட்டரில் இருந்து பில்லை பிரிண்ட் கொடுத்தார். "க்க்ரூக்...ட்ட் க்ரூக்க்" என கேனன் லேசர்ஜெட் பிரிண்டரில் பில் பிரிண்ட் ஆகியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

COME AND JOIN OUR TELEGRAM GROUP!

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 7

கனாபிஸ் எனப்படும் கஞ்சா வகை தான் உலக அளவில் அதிகம் பயன்படுத்தப்படும் போதைப் பொருளாக உள்ளது. அதைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 10 வருடங்களில் 16% அதிகரித்து உள்ளது.

தியாகராய நகரின் பிரதான இடத்தில் அமைந்திருந்தது அந்தப் பள்ளி. ஒரு காலத்தில் கண்டிப்பிற்கு பெயர் போன பிரபலமான பள்ளி அது. கல்வி வள்ளல் ஒருவரால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டு தற்போது அரசு தரும் உதவியால் மட்டுமே நடந்து கொண்டிருக்கிறது. அவரது வாரிசுகள் கடமைக்கு நிர்வகிக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு அரசு சம்பளம் வருவதால் பள்ளி நடத்த முடிகிறது. ஆயினும் தற்போது எழுநூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அனைவருமே தியாகராய நகரில் வேலை செய்யும் தொழிலாளர் வர்க்க குழந்தைகள். அவர்களுக்கு இந்தப் பள்ளியை விட்டால் வேறு போக்கிடம் இல்லை. இந்தப் பள்ளிக்கும் இவர்களை விட்டால் வேறு ஆளில்லை.

இந்தப் பள்ளி வளாகத்திற்குள் இருக்கிற பெரிய நிலம் பலர் கண்ணை உறுத்தியது. இதனாலேயே பல புகார்கள் கிளப்பி விடப்பட்டதும் உண்டு. அவற்றையும் மீறி செயல்பட்டுக் கொண்டிருந்தது அந்தப்பள்ளி.

கார்த்திக் ஆல்டோவின் காவல்துறை அடையாள அட்டையைப் பார்த்தவுடன் மறுபேச்சில்லாமல் கதவை திறந்து உள்ளே விட்டார்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

வாட்ச்மேன். ஒரு மரத்தடியில் நிழல் இருக்கும் இடமாகப் பார்த்து காரை நிறுத்தினான். தலைமை ஆசிரியர் அனுமதியைப் பெற்று வகுப்பாசிரியரை, ஆசிரியர் அறையில் சந்தித்தான். நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க பெண் ஆசிரியர். சாதாரணமாக பேசுவது கூட கண்டிப்பு கலந்து பாடம் எடுக்கும் தொனியில் இருந்தது.

"அந்தப் பையன் எப்படி? தினமும் கிளாஸ்க்கு வருவானா? இல்லை அடிக்கடி விடுமுறை எடுப்பானா?"

"சில நேரங்களில் அடிக்கடி விடுமுறை எடுப்பான். தெளிவான காரணமும் இருக்காது. இது இந்த ஸ்கூல்ல படிக்குற பசங்க கிட்ட அடிக்கடி நடக்குறது தான்."

“நீங்க கண்டிக்க மாட்டீங்களா?”

“கண்டிச்சா அதுக்கு பிறகு வரவே மாட்டாங்களே”

"உங்களுக்கு தெரிஞ்சு ஏதாவது பீடி சிகரெட் பழக்கம் அல்லது ட்ரிங்க்ஸ்?"

"பொதுவா சொல்றேன். என்னோட அப்சர்வேசனில் இப்ப இருக்க பசங்களிடம் முக்கால்வாசிப்பேருக்கு எல்லாப் பழக்கமுமே இருக்கு. ஆனால் அவங்களும் வெளில காட்டிக்கிறது இல்லை. நாங்களும் கேட்டுக்கிறது இல்லை. இவனுக்கு இருக்கான்னு கரெக்ட்டா சொல்லத் தெரியல. ஆனா இருக்கிறதுக்கு தான் வாய்ப்பு அதிகம்."

"ஸ்கூல்ல ஏதாவது பிரச்சனை அடிதடியில் அந்த பையன் சிக்கியிருக்கானா?"

"இதுவரை இல்லை. பெரும்பாலும் படிப்பில் மந்தமா இருப்பதற்கு தான் அவன் திட்டுவாங்குவான்"

"உங்களுக்கு தெரிஞ்சு வேற பசங்க கூட ஏதாவது தகராறு, பழிவாங்கல் இப்படி? இவனைவிட மூத்த வகுப்பு, இளைய வகுப்பு?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"அப்படி ஏதும் இதுவரை வந்ததில்லை"

"நல்லது டீச்சர். ரொம்ப தேங்க்ஸ். அவனோட நெருங்கிய நண்பர்கள் யாராவது இருக்காங்களா?"

"தங்கராஜ்ன்னு ஒரு பையன் இருக்கான். என் கிளாஸ் தான். ரெண்டு பேரும் தான் எப்பவுமே சுத்திட்டு இருப்பாங்க."

மாலை நான்கு முப்பது மணி. பள்ளிக்கு எதிரே இருந்த டீக்கடையில் லெமன் டீ குடித்த படி காத்திருந்தான் ஆல்டோ. சற்று முன் பெய்த மழை இந்த லெமன் டீயின் சுவையை அதிகரித்திருந்தது. அதில் போடப்பட்டிருந்த இலை துளசி இலையா புதினா இலையா என கண்டுபிடிக்க வெகுநேரம் முயற்சித்தான். கடைக்காரரிடம் கேட்கவும் கூச்சமாக இருந்தது. "இதைக்கூட கண்டுபிடிக்க முடியல நீ எல்லாம் கொலைக்கேஸை கண்டுபிடிச்சு..." ஆனால் இவருக்கு தான் நான் போலீஸ்னு தெரியாதே. இப்படி சம்பந்தமில்லாமல் எண்ணங்கள் தோன்றின. அவற்றை புறந்தள்ளி அடுத்து செய்ய வேண்டியவற்றைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தான்.

நான்கு மணிக்கே பத்தாம் வகுப்பு வரையிலான மாணவர்கள் சென்றிருந்தனர். இன்னும் சிறிது நேரத்தில் பதினொன்றாம், பனிரண்டாம் வகுப்பு மாணவர்கள் வந்துவிடுவர். காத்திருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் கிர்ர்ர்ர் என மின்சார மணியின் ஓசை கேட்டது. பள்ளியின் உள்ளிருந்து சலசலவென பேச்சு சத்தம் மெதுவாக ஆரம்பித்து இரண்டுநிமிடத்திற்குள் சாலையின் சத்தத்தை விட அதிகமாகி இருந்தது. இருசக்கர வாகனங்களில் பெற்றோர் சிலர் பிள்ளைகளை அழைத்துச் செல்ல காத்திருந்தனர்.

முதலில் துருதுருவென ஓடி வந்த ஒரு மாணவனை நிறுத்தினான் ஆல்டோ.

"11th C தங்கராஜ் எங்க இருக்கான்? நான் அவனோட மாமா. அவனைப் பார்க்க வந்திருக்கேன்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

உடனே அவன் பள்ளி வளாகத்திற்குள் ஆளுக்கொரு சைக்கிளுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்த ஒரு கும்பலைப் பார்த்து கத்தினான். "டேய் தங்கராஜ் உன் மாமா வந்திருக்கார். வாடா"
கும்பலில் இருந்து ஒல்லியான உயரமான ஒரு பையன் மட்டும் திரும்பிப் பார்த்து சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வெளியே வந்தான்.

ஆல்டோவைப் பார்த்ததும் ஆச்சரியமான அவன், யார் என்பது போலப் பார்த்தான். ஆல்டோ வெகு சகஜமாக உரையாடலை ஆரம்பித்தான்.

“தங்கராஜி!!!!!! எப்படி இருக்க? பார்த்து எவ்ளோ நாள் ஆச்சு. இப்ப தான் வீட்டுக்குப் போயிட்டு வர்றேன். அம்மா சொன்னுச்சு ரொம்ப வளர்ந்திட்டான்னு. அப்ப நம்பல. இப்ப நேர்ல பார்த்தா தான் தெரியுது."

அந்த துருதுரு பையன் இவர்கள் உரையாடலை கேட்கப் பொறுமை இல்லாதவனாக நழுவினான். தங்கராஜ் இன்னும் யார் எனப் புரியாமல் மய்யமாக தலையாட்டிச் சிரித்தான். இருவரும் சாலையின் ஓரம் இருந்த டீக்கடையின் பக்கம் ஒதுங்கினார்கள்.

"இவர் யாரு? எங்கயாவது பார்த்திருக்கோமா? பொதுவா அம்மா யாரையும் ஸ்கூல் பக்கம் எல்லாம் அனுப்பாதே. ஆனால் இவர் கரெக்ட்டா நம்ம பேரைச் சொல்லிக் கூப்பிடுறார்!! ஒருவேளை கடத்தல் கும்பலா இருக்குமோ. இந்த ரோடு சேஃப்தான். வேற எங்கயும் கூப்டா போயிடக்கூடாது." இவ்வாறு தங்கராஜ் மனதிற்குள் பல எண்ணங்கள் ஓடின.

தங்கராஜ் யோசித்துக் கொண்டே மலங்க மலங்க விழிப்பதைக் கண்டவுடன் ஆல்டோ மெதுவாக ஆரம்பித்தான்.

"தம்பி நீ யோசிக்கிறது சரிதான். நான் உன் மாமா இல்லை. போலிஸ்." அடையாள அட்டையை காட்டினான். தங்கராஜின் இதயம் முன்பைவிட படபடவென துடித்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"ஒன்னும் பயப்படாத. டீ குடிக்கிறியா?”

"இல்ல. வேணாம்.”

"செல்வக்குமார் பத்தி கேட்கத் தான் இங்க வந்திருக்கேன். நீ தான் அவன் பெஸ்ட் ஃபிரண்டாமே?"

"ஆமா. நாங்க ரெண்டு பேரும் ஏழு வருசமா ஒரே ஸ்கூல் “

"அவனுக்கும் வேற பசங்களுக்கும் ஏதாவது பிரச்சனை இருந்துச்சா? ஸ்கூல்ல உங்க கிளாஸ், மத்த கிளாஸ் பசங்ககிட்ட ஏதாவது சண்டை?”

"இல்ல சார். ஸ்கூல்ல எல்லாம் பிரச்சனை எதுவும் இல்ல" அவசரமாக மறுத்தான்.

"அப்ப வெளில இருக்கு?”

சடாரென தங்கராஜின் முகம் மாறியது. "வெளில பத்திலாம் எனக்கு தெரியாது சார். ஸ்கூல்ல யார் கூடவும் பிரச்சனை இல்ல. எனக்கு லேட் ஆகுது. நான் கிளம்பனும்." கிளம்ப எத்தனித்தான்.

"தம்பி. நீ படிக்குற பையன். அதுனால தான் நான் போலிஸ்ன்னு கூட மத்தவங்களுக்கு தெரியாத மாதிரி மஃப்டில வந்து விசாரணை பண்றேன். உனக்கு தெரிஞ்சதைப் பயப்படாம சொல்லு. இல்ல, இங்க சொல்லமாட்டேன்; ஸ்டேசனுக்கு கூட்டிட்டு போய் விசாரிக்குற மாதிரி விசாரிச்சா தான் சொல்வேன் அப்படின்னா ஒன்னும் பிரச்சனை இல்லை. நாளைக்கு யூனிபார்மோட ஜீப்ல வர்றேன்."

தங்கராஜ் கால்கள் படபடவென ஆடியது. கண்களில் நீர் திரையிட்டது. "நீங்க பயமுறுத்துறீங்க சார்.”

"ஒகே நீங்க கிளம்புங்க தம்பி. நாளைக்கு நம்ம ஸ்டேசன்ல பார்க்கலாம்"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

ஆல்டோவும் கிளம்புவது போல பாசாங்கு காட்டினான்.
திரும்பி நடக்க எத்தனித்த போது "ஹோலி ஏஞ்சல் ஸ்கூல்ல பெரிய பிரச்சனை ஆச்சு சார்." அவசரமாக கத்தினான் தங்கராஜ்.

"ஹோலி ஏஞ்சல் ஸ்கூலா? என்ன பிரச்சனை?"

"ஹோலி ஏஞ்சல் ஸ்கூல்ல அவன் ஆளு பத்தாவது படிக்குது சார். டெய்லி என் சைக்கிளில் தான் ரெண்டு பேரும் ஃபாலோ பண்ணுவோம்."

"அவன் ஆளா? செல்வக் குமார் லவ் பண்ணுனானா?

"ஆமா சார். சின்சியர் லவ். ஆனா அந்தப் பொண்ணு தான் இவனை திரும்பிப் பார்க்கக் கூட இல்ல."

"ஓஹ்.. இது தான் லவ்வா?"

"நாங்க டெய்லி பின்னாடியே போவோம் சார். பேச ட்ரைப் பண்ணுவோம். அந்தப் பொண்ணு டென்சனாகி, போனவாரம் அவ அண்ணன்கிட்ட சொல்லிடுச்சு சார். அவன் நந்தனம் ஆர்ட்ஸ்ல படிக்குறான். போன புதன்கிழமை அவ அண்ணன் ஆளுங்களோட வந்து எங்களைச் சுத்திட்டான். செல்வக்குமாரோட கன்னத்திலயே ரெண்டு போட்டான். கத்திலாம் வச்சிருந்தானுங்க. இனிமே வந்தா கொலை பண்ணி இரயில்வே ட்ராக்ல போட்ருவோம்னு மிரட்டுனான்."

"அதுக்கு பிறகு போனீங்களா?"

"நான் போகலை சார். எனக்கு பயமாயிடுச்சு. ஆனா செல்வக் குமார் அதுக்குப் பிறகும் போனான். அவன் சொன்ன மாதிரியே செஞ்சுட்டான் சார்." பயம் விலகாமல் சொன்னான்.

"அந்தப் பொண்ணு பேர் என்ன, அவங்க அண்ணன் இப்ப எங்க இருப்பான்? வீட்டு அட்ரஸ் தெரியுமா?"

தங்கராஜ் சொல்லச் சொல்ல கார்த்திக் ஆல்டோ குறித்துக் கொண்டான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

சரியாக இரண்டு மணி நேரம் கழித்து அந்தப் பெண்ணின் அண்ணன் கார்த்திக் ஆல்டோவின் அலுவலகத்தில் அமர வைக்கப்பட்டிருந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 8

உடல் நலத்திற்கு அதிக ஊறு விளைவிக்கும் போதைப் பொருளாக ஓப்பியம் வகை போதைப் பொருட்கள் உள்ளன. போதைப் பொருட்கள் தொடர்பான மரணங்களில் 76% ஓப்பியம் வகைப் போதைப் பொருட்களால் தான் ஏற்படுகிறது.

டேனியல். சுருக்கமாக டேனி. வயது 21.

தினமும் ஜிம்மிற்கு செல்வான் போல. இறுக்கமான டிசர்ட்டிற்குள் உறுதியான சதைகள் பிதுங்கிக் கொண்டு தெரிந்தன. கழுத்தில் வெள்ளை நிறத்தில் பெரிய சங்கிலி மின்னியது. அதன் மிச்சம் இடது கை மணிக்கட்டில். தலையின் நடுவில் காடு போல உயரமாக வளர்ந்த முடி செம்பட்டை அடித்திருந்தது. ஆனால் காது ஓரத்தில் ஒட்ட வெட்டப்பட்டு மூன்று கோடு வரையப்பட்டிருந்தது. பிறந்ததில் இருந்தே வெயிலில் கிடந்ததைப் போல முகம் கருத்திருந்தது. கைகளை டேபிள் மீது உறுதியாக வைத்திருந்தாலும் கால்களை ஆட்டிக் கொண்டே இருந்தான்.

"திங்கள் கிழமை காலை 9 மணிக்கு எங்க இருந்த?"

"திங்கள் கிழமை..." சிறிது நேர யோசனைக்கு பிறகு "பத்து மணிக்கு காலேஜ் சார். ஒன்பது மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பி காலேஜ்க்கு வந்தேன்."

"வீடு எங்க இருக்கு?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"சைதாப்பேட்டை தாதண்டர் நகர்"

"பஸ்ஸா? பைக்கா?"

"பைக் தான்"

"அங்க இருந்து நந்தனம் வர்றதுக்கு ஒரு மணி நேரமா?"

"இல்ல சார். பதினஞ்சு நிமிசத்தில வந்திடலாம்."

"அப்ப ஒரு மணி நேரம் என்ன பண்ணுன?"

"கோட்டூர் புரத்தில் என் கிளாஸ்மேட் இருக்கான் சார். அவனை பிக்கப் பண்ணிட்டு, பெட்ரோல் போட்டோம். பிறகு எப்பவும் டீ குடிக்கிற கடையில் டீ குடிச்சிட்டு சீக்கிரமாவே காலேஜ்க்கு போய்ட்டோம் சார்."

செல்வக் குமாரின் போட்டோவை எடுத்துக் காட்டினான் ஆல்டோ.
"இவனைப் பார்த்திருக்கியா?"

டேனி சிறிது அதிர்ச்சியானான். "பார்த்திருக்கேன் சார்."

"எங்க?"

"என் தங்கச்சி, இவன் கிண்டல் பண்ணி பின்னாடியே சுத்துறான்னு சொன்னா. போன வாரம் புதன்கிழமை இவனை ஃபிரெண்ஸோட போய் என்னன்னு கேட்டேன் சார்"

"என்னன்னு கேட்டியா? அடிச்சியா?"

"அ..... அடிச்சேன்"

"யார் யார் போனீங்க?"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"நான், குமார், நவீன், வின்சென்ட்"

"கடைசியா இவனை எப்பப் பார்த்த?"

"அன்னைக்குப் பார்த்தது தான் சார்."

"அதுக்குப் பிறகு அவன் உன் தங்கச்சி பின்னால் வந்தானா?"

"ஒருநாள் வந்தானாம். ஆனா அதுக்குப் பிறகு வரவே இல்லையாம்."

"நீ சொன்ன பிறகும் வந்தான்னு உனக்கு கோபம் வரலையா?"

"கோபம் வந்திச்சு. ஆனா அதுக்குப் பிறகு அவன் வராததால விட்டுட்டேன்."

"இவனைப் போன வாரம் யாரோ மவுண்ட் ஸ்டேசன்ல கொன்னுட்டாங்க". அதிர்ச்சியில் டேனி எழுந்து நின்றான்.

"சார். நான் பேச்சுக்குத் தான் மிரட்டுனேன். மத்த படி எனக்கும் இதுக்கும் சம்பந்தம் இல்லை. தங்கச்சியை தொந்தரவு பண்ணுனா யாரா இருந்தாலும் கோபம் வரத்தான செய்யும்? மத்தபடி நான் கொலை எல்லாம் பண்ண நினைக்கலை சார்."

"நீ நினைக்கல. உன் ஃபிரெண்ட்ஸ் நினைத்திருந்தால்?"

"அவங்கலாம் அப்படிப் பண்ண மாட்டாங்க சார்"

"அதை நாங்க பார்த்துக்கிறோம்" வேகமாக விசாரணை அறையை விட்டு வெளியே வந்தான் ஆல்டோ.

பிறகு உதவி ஆய்வாளர் திருவை அழைத்துச் சுருக்கமாக விசாரணையில் கிடைத்த தகவல்களை விளக்கினான்.

"திரு நீங்க இந்த பையனோட மொபைல் நம்பர் வாங்கி கால்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

ரெக்கார்ட்ஸ் எல்லாம் செக் பண்ணிடுங்க. அந்தப் பசங்க திங்கள் கிழமை காலையில் கோட்டூர்புரத்தில் இருந்தேன்னு சொல்றாங்க. அவனுங்க சொல்ற ரூட்ல எதாவது சிசிடிவி கேமரா இருந்தா ஃபூட்டேஜ் செக் பண்ணிடுங்க."

"ஓகே சார். பையனை ரிமாண்ட் எதுவும் பண்ணனுமா?"

"வேணாம். போனை வாங்கிப் பார்த்திட்டு அனுப்பிடுங்க. ஏதாவது லீட் கிடைச்சப் பிறகு பண்ணலாம்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 9

உலகம் முழுவதும் ஒரு கோடிப் பேர் ஊசி மூலம் போதை மருந்துகளை உட்செலுத்தும் பழக்கம் உடையவர்களாக உள்ளனர். அவர்களில் 50% பேர் ஹெச்.ஐ.வி, ஹெப்பாடைடிஸ் சி போன்ற வியாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்சாரத் தொடர்வண்டியில் செல்வக் குமாருடன் பயணம் செய்த சட்டக் கல்லூரி மாணவர் மணிமாறனுடன் காலை எட்டு மணிக்கே தாம்பரம் ஸ்டேசனில் ஆஜராகிவிட்டார் உதவிஆய்வாளர் கோபி. மின்சார தொடர் வண்டிகளின் நடைமேடை முழுவதையும் பார்க்கும் வண்ணம் நடைமேடை பாலத்தின் நடுவில் நின்று கொண்டனர். பாலத்திற்கு கீழே அபாயம் என சிவப்பு நிற மண்டை ஓடு படத்துடன் பல மின்சார கம்பிவடங்கள் ஒரே நேர் கோட்டில் சென்றன. தூரத்தில் ஒளிரும் முகப்பு விளக்குகளோடு முழுக்கத் தின்ற மலைப்பாம்பு போல இரயில்கள் ஆடி அசைந்து வந்து சரியாக தங்கள் நடைமேடைக்குள் பொருந்தின. அவை வரும் போது, முதல் முறை சேர்ந்து பயணம் செய்யும் புதுமண தம்பதி போல இரயிலில் துருத்துக் கொண்டு நின்ற கம்பி மின்சார வயர்களை உரசி உரசிப் பிரிந்து சென்றது. இவை எதையும் கண்டுகொள்ளாமல் கோபியின் கண்கள் உயரமான மாநிற திருநெல்வேலிக்காரரைத் தேடிக் கொண்டிருந்தன. கையில் பைனாக்குலர். கடற்கரை நோக்கிச் செல்லும் மின்சார இரயில்களில் ஏறி இறங்குவோரை கூடுதல் கவனத்துடன் பார்த்தார். சந்தேகத்திற்குரிய நபர்களை பைனாக்குலர் வைத்து ஜூம் செய்து நோக்கி மணிமாறனிடம் காட்டி உறுதி செய்து கொண்டார். நான்கு காண்ஸ்டபிள்கள் சாதாரண உடையில் மின்சார இரயில் செல்லும் நடைமேடைகளில் மக்களோடு மக்களாக விரவி நின்றனர். ப்ளூடுத்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

ஹெட்செட் மூலம் தாங்கள் தயாராக இருப்பதாகக் கோபிக்கு தெரிவித்தனர். நிமிடங்கள் கரைந்து கொண்டிருந்தன.

“எங்களுக்காக உதவி செய்ய வந்ததற்கு நன்றி மணிமாறன்”

“இதில் என்ன சார் இருக்கு? நானும் படிச்சு முடிச்சிட்டு நீதித் துறைக்குத் தானே வரப் போறேன்?”

“இப்ப நம்ம பண்றது ஒரு முயற்சி தான். இதுல நம்ம அவரைக் கண்டுபிடிப்போமா என்றும் தெரியாது. அவர் தான் குற்றவாளியா என்றும் தெரியாது. ஆனால் எந்த க்ளூவும் இல்லாத இந்த கேஸ்ல நீங்க கொடுத்தது ஒரு முக்கியமான தகவல்”

கடற்கரை வரை அனைத்து நிறுத்தங்களிலும் நின்று செல்லும் சாதாரண மின்தொடர் வண்டி முதல் நடைமேடையில் நின்றது. காலை 8.20 மணிக்கு இந்த இரயில் சென்ற பின்தான் சம்பவம் நடைபெற்ற அந்த விரைவு இரயில் வரும். விரைவு இரயிலுக்கு பின் பதினைந்து நிமிடம் கழித்து தான் அடுத்த இரயில். 8.20 சாதாரண இரயில் கிளம்பிச் செல்வதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்தன. அறிவிப்பு செய்பவர் இன்னும் சற்று நேரத்தில் இரயில் கிளம்பப் போவதை உறுதி செய்தார். நடைமேடையே பரபரப்பாகக் காணப்பட்டது. ப்பூயூம் என்ற சத்தத்துடன் மெதுவாக மின்சார இரயில் நகரத் தொடங்கியது.

அப்போது இரயில் நிலைய நுழைவு வாயிலில் இருந்து நடைமேடையில் இரயிலை நோக்கி கிட்டத்தட்ட மணிமாறன் கூறிய அடையாளத்துடன் ஒருவர் ஓடி வருவது தெரிந்தது. பைனாக்குலர் வைத்து உற்று நோக்கி அடையாளம் காண நினைப்பதற்குள் மணிமாறனும் கண்டு கொண்டான். "சார் அவர் தான். பிளாட்பார்ம்ல ஓடுறார் பாருங்க. ப்ளூ சட்டை சாண்டல் பேண்ட், அவரே தான்".

“suspect visible. In dark blue shirt with a shoulder bag, heading towards electric train in platform number one (சந்தேகத்திற்கு உரிய நபர் தென்படுகிறார், அடர் நீல நிறச் சட்டையும், தோள்ப்பட்டை பையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

அணிந்து முதலாம் நடைமேடையில் உள்ள மின்சார இரயிலை நோக்கிச் செல்கிறார்)" ஹெட்செட்டில் கத்திக் கொண்டே படிகளில் இறங்கி ஓடினார் கோபி. கூட்டத்தில் மறைந்திருந்த கான்ஸ்டபிள்களும் அவரை நோக்கி ஓடத் தொடங்கினர். பயணிகளின் கூட்டத்திற்குள் புகுந்து அவர்களை விலக்கிவிட்டு தங்களால் முடிந்த அளவு வேகமாக அனைவரும் ஓடினர். அந்த நீலச்சட்டை இரயிலின் அருகில் சமீபிக்க இரயில் வேகமெடுக்கத் தொடங்கியது. வேகத்தை அதிகப்படுத்திய நீலச்சட்டை கண்ணிமைக்கும் நேரத்தில் இரயில் ஏறினார். ஓடி வந்த அனைவரும் இரயிலை நெருங்குவதற்குள் உச்சபட்ச வேகத்தை இரயில் அடைந்திருந்தது. தடக் தடக் என இரயில் அவர்கள் கண் முன்னால் செல்ல மூச்சு வாங்க அனைவரும் நின்றிருந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 10

உலகம் முழுவதும் பார்ன் இண்டஸ்டரி எனப்படும் ஆபாசப் படங்களுக்கான வியாபாரத்தின் அளவு ஏழு இலட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப் பட்டுள்ளது.

" இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் சார்?"

"சொல்லுங்க கோபி"

"மவுண்ட் ஸ்டேசன் கேஸ்ல முக்கியமான சஸ்பெக்ட் ஒருத்தரை ஃபாலோ பண்ணி தாம்பரம் ஸ்டேசன் வந்தோம். ஆனால் அவர் எலக்ட்ரிக் ட்ரெயினில் ஏறி தப்பிச்சிட்டார். 8.20 தாம்பரம் கடற்கரை எலக்ட்ரிக் ட்ரெயின்."

"என்ன ஹெல்ப் வேணும் சொல்லுங்க. உடனடியா அடுத்து வர்ற எல்லா ஸ்டேசன்களையும் அலர்ட் பண்றேன்."

"அடுத்து வர்ற ஸ்டேசனில் ட்ரெயினை நிறுத்தி வைக்க முடியுமா சார்?. நாங்க இப்ப ஜி.எஸ்.டி சாலை வழியா பின் தொடர்ந்து போயிட்டு இருக்கோம்."
சைரனை அலறவிட்டபடி ஜி.எஸ்.டி சாலையில் கோபியின் சுமோ ட்ராஃபிக்கில் நுழைந்து பறந்தது.

பல்லாவரம் இரயில் நிலையத்திற்கு இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் தகவல் கொடுத்திருந்தார். அப்போது பணியில் இருந்த மூன்று காவலர்களும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

அறையில் இருந்து நடைமேடை நோக்கி ஓடினர். அதற்குள் இரயில் வந்து நின்றிருந்தது. அலை போல மக்கள் கூட்டம் இரயிலில் இருந்து இறங்கியது. அதற்கும் சற்றும் குறைவில்லாத மக்கள் கூட்டம் இரயிலுக்குள் ஏறியது. நடைமேடை முழுவதும் மனிதத் தலைகள். இதில் எங்கு நீலச்சட்டையை தேடுவது?

பல்லாரவரம் நிலைய இரயில்வே தலைமைக் காவலர், இன்ஸ்பெக்டர் பாஸ்கரனை தொடர்பு கொண்டார். "சார் கிரவுட் நிறைய இருக்கு. நீலக்கலர் சட்டை என்பதை வைத்து எதுவுமே செய்ய முடியாது."

"நீங்க சப்இன்ஸ்பெக்டர் கோபி வர்ற வரை ட்ரெயினை நிறுத்தி வைங்க. லோக்கல் பல்லாவரம் போலிஸ்க்கு தகவல் கொடுத்து வரச்சொல்லுங்க. சந்தேகப்படும் படி யாரும் இருக்காங்களான்னு கவனமாகப் பாருங்க."

ஐந்து நிமிடமாக இரயில் பல்லாவரம் ஸ்டேசனில் நின்றது. பயணிகளில் சிலர் முணுமுணுக்கத் தொடங்கினர்.

"இவங்களுக்கு இதே வேலையாப் போச்சு. ஒரு நாளாவது நேரத்துக்கு வேலைக்குப் போக முடியுதா?"

ஓட்டுநர் பெட்டியில் இருந்து மூன்றாவது பெட்டியில் உட்கார்ந்திருந்த அந்த நீல நிறச் சட்டை அணிந்த நபர் மிகுந்த பரபரப்புடன் அமர்ந்திருந்தார். ஜன்னல் வழியே வெளியே பார்ப்பதும், வியர்வையை துடைப்பதுமாக அமைதியில்லாமல் இருந்தார். வலது கால் தன்னிச்சையாக ஆடிக்கொண்டு இருந்தது.

தட தடவென இரயில் நிலையத்திற்குள் நிறைய எண்ணிக்கையில் பல்லாவரம் காவல் சரக காவலர்கள் உள் நுழைந்தனர். எட்டிப்பார்த்த ஒரு பயணி சத்தமாக கூறினார். "இன்னைக்கு எப்படியும் அரைநாள் லீவ் தான். ஏதோ பெரிய பிரச்சனை போல. இவ்ளோ போலிசை குவிச்சுருக்காங்க"

நீலச் சட்டையும் நடைமேடையை பார்த்தார். காக்கி யூனிபார்ம்கள் நிறைய

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

தெரிந்தன. போலிஸைப் பார்த்ததும் நீலச் சட்டையின் முகம் மாறியது. கவலைச் சாயம் அப்பியது. சிறிது நேர யோசனைக்கு பிறகு இரயிலில் இருந்து இறங்கினார். இரயில் நிலையத்தின் தடுப்புகளை ஒரு இடத்தில் உடைத்து வைத்திருந்தனர். பிரதான நுழைவாயில் வழியாக செல்லாமல் இந்த தடுப்பைத் தாண்டிச் சென்றால் ஜி.எஸ்.டி சாலையை இரயில் நிலையத்துடன் இணைக்கும் சாலையை எளிதில் அடையலாம். நேரமும் தூரமும் குறைவு என்பதால் சில பயணிகள் இந்த வழியை அவர்களாகவே ஏற்படுத்தி வைத்திருந்தனர். படக்கென தண்டவாளத்தில் குதித்து அந்த உடைந்த தடுப்பை ஏறிக் குதித்து ஜி.எஸ்.டி சாலையை நோக்கி ஓட ஆரம்பித்தார். அதைக் கவனித்த ஒரு காவலர் "நீலச் சட்டை ஓடுறான்" என சத்தம் போட்டுக் கத்தினார். சரியாக அப்போது இரயில் நிலையத்திற்குள் நுழைந்த கோபியும் ஓடுகின்ற நீலச்சட்டையைப் பார்த்துவிட்டார்.

இம்முறை என்னவானாலும் விடக்கூடாது என தீர்மானம் எடுத்துக் கொண்டு மீண்டும் சுமோவில் ஏறி ஓடும் நபரை பின் தொடர ஆரம்பித்தார்.

பல்லாவரம் ஜி.எஸ்.டி சாலையில் பாலம் வேலை நடைபெறுவதால் வாகனங்கள் மெதுவாக ஊர்ந்து சென்றன. பிரதான சாலையை நோக்கி வந்த நீலச்சட்டை மெதுவாக சென்று கொண்டிருந்த ஒரு பேருந்தில் தாவி ஏறினார். பாலம் வேலை நடைபெறும் இடத்தை தாண்டி பேருந்து வேகம் பிடித்தது.

பின்னால் விரட்டி வந்த கோபியின் சுமோவும் அதற்குள் பிரதான சாலையை நெருங்கியது. குறி வைத்து அந்தப் பேருந்தை விரட்ட ஆரம்பித்தார். இரண்டு நிமிடத்திற்குள் சுமோ, பேருந்தின் முன்புறம் சைரன் ஒலித்துக் கொண்டு மறித்து நின்றது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 11

2016 ஆம் ஆண்டு உலக மக்கள் 4,599,000,000 மணி நேரங்கள் ஆபாசப் படங்களைப் பார்த்துள்ளனர்.

திடீரென பேருந்தின் முன்புறம் சைரன் வைத்த காவல்துறை வாகனம் இடைமறித்தைக் கண்டு பயணிகள் அனைவரும் ஆச்சரியமடைந்தனர். பேருந்தின் முன்பக்க, பின்பக்க படிகளை போலிசார் சூழ்ந்து கொண்டனர். கோபி பேருந்தில் ஏறி பார்வையை சுழல விட்டார். வியர்த்து வழிந்த படி அமர்ந்திருந்த நீலச்சட்டையைக் கண்டுபிடிக்க அதிக நேரம் ஆகவில்லை.

"சார் கொஞ்சம் எங்க கூட வர்றீங்களா?"

"எதுக்கு சார்? நான் என்ன பண்ணேன்.?"

"ஒரு சின்ன விசாரணை. கூட வாங்க"

"முடியாது சார். எங்க கம்பெனில இன்னைக்கு ஆடிட்டிங். கண்டிப்பா நான் போய் ஆகனும்."

நீலச்சட்டை இறங்க முயல அதற்குள் நான்கு காக்கி யூனிபார்ம்கள் நெருங்கி வந்து எளிதாக கட்டுக்குள் கொண்டு வந்து போலிஸ் வேனில் ஏற்றினர்.

ஆல்டோ அலுவலக விசாரணை அறைக்கு உள்ளே இருந்து வெளியே பார்த்து நீலச் சட்டை சத்தம் போட்டுக் கொண்டு இருந்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"இது இல்லீகல் டிடென்சன் சார். எதுக்கு இப்பம் இங்க கொண்டுவந்தீங்க? நான் என்ன பண்ணுனேன்?

கோபி திரும்பிப் பார்த்து அமைதியானர். ஆல்டோ வரட்டும். நெடுநேரம் கத்த வைக்கமால் ஆல்டோவும் அடுத்த ஐந்து நிமிடத்திற்குள் வந்துவிட்டான்.

"சாரி சார். ஒரு சின்ன மர்டர் என்கொயரி. வேறு வழியில்லை நீங்க விசாரணைக்கு ஒத்துழைச்சு தான் ஆகனும்."

"அதுக்காக இப்படியா சார் அரெஸ்ட் பண்ணுவாங்க. நடுரோட்டில் வேலைக்கு போகும் போது? எங்க கம்பெனிக்கு தெரிஞ்சா வேலை போய்டும்."

"எங்களுக்கு வேறு வழி தெரியல சார். உங்க பேரு கூட தெரியாது. உங்க பேர் என்ன?"

"கமலநாதன். ஆல்பா பார்மசூட்டிகல் சவுத் சென்னை ஏரியா மானேஜர்."

"உங்க ஆபிஸ் எங்க இருக்கு?"

"நுங்கம்பாக்கம்."

"தினமும் நீங்க ட்ரெயின்ல தான் போவீங்களா?"

"ஆமாம். வீடு சிட்லபாக்கம். அதுனால ட்ரெயின் தான் பெஸ்ட்."

"8.20 பாஸ்ட்ல போயிட்டு இருந்த நீங்க ஏன் இப்ப அதுல வர்றது இல்ல?"

"இதை கேட்கத் தான் விரட்டி விரட்டி அரெஸ்ட் பண்ணீங்களா? முன்னாடி ஆபிஸ் எக்மோர்ல இருந்தது. இப்ப நுங்கம்பாக்கம் மாத்திட்டாங்க. பாஸ்ட் ட்ரெயின் நுங்கம்பாக்கம் ஸ்டேசனில் நிக்காது அதனால நான் சாதாரண ட்ரெயினில் போறேன்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

ஆல்டோ கண்ணைக் காட்டினார். புரிந்து கொண்ட கோபி தொலைபேசியை எடுத்தார்.

"ஹலோ ஆல்பா பார்மசூட்டிகல். நாங்க ஸ்டேட் கிரைம் கன்ட்ரோல் யூனிட்ல இருந்து பேசுறோம். உங்க ஆபிஸ் எங்க இருக்கு?”

"நுங்கம்பாக்கம் சார். எதாவது பிரச்சனையா?”

"பிரச்சனை ஒன்னும் இல்ல சார். எவ்வளவு வருசமா நுங்கம்பாக்கத்தில் இருக்கு?”

"இப்ப ஒரு பத்து நாள் முன்னாடி தான் மாத்துனோம். அதுக்கு முன்ன எக்மோர்."

"ஓகே சார். நன்றி. ஒரு கன்பார்மேசனுக்கு தான் கேட்டோம்."

கோபி ஆல்டோவிடம் பாசிடிவ் என சமிக்ஞை காட்டினார்.

"பிறகு எதுக்கு எங்களைப் பார்த்து ஓடுனீங்க?"

"நான் எங்க சார் ஓடுனேன். உங்களைப் பார்க்கக் கூட இல்ல. இன்னைக்கு கம்பெனில ஆடிட்டிங் வேற. தாம்பரம் ஸ்டேசன்லயே லேட். கடைசி நிமிசத்தில் தான் ட்ரெயினை பிடிச்சேன். அது என்னனா பல்லாவரத்தில் நிறுத்திப் போட்டுட்டாங்க. எவ்வளவு நேரம் ஆகுமோ. அதுக்குள்ள பஸ்ல போயிடலாம்னு இறங்கி பஸ்ல ஏறுனா, நீங்க வந்து குறுக்க நிக்கீங்க.”

"உங்க சொந்த ஊர் எது?”

"தின்னவேலி. ஆனா பத்து வருசமா இங்க தான் இருக்கேன்.”

"நீங்க இந்தப் பையனை பார்த்திருக்கீங்களா?" செல்வக் குமாரின் புகைப்படத்தை காட்டினான்.

"இவம் ட்ரெயினில் கூட வர்ற பையன்லா. பாவம் செத்துப் போனான்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"இவனுக்கும் உங்களுக்கும் என்ன பிரச்சனை?"

"எப்பம் பார்த்தாலும் பான்பராக் மாதிரி ஏதோ ஒன்னு போட்டு படில நின்னு துப்புவான். அது எதிர் காத்துல மூஞ்சில அடிக்கும். அதைச் சொன்னா எகத்தாளமா பேசுனான். அதான் செவுள்லயே ஒன்னு விட்டேன். அதுக்கு பொறவு ஒழுக்கமா வந்தான்."

"அவன் ட்ரெயின்ல இருந்து விழுந்த அன்றைக்கு நீங்க அந்த ட்ரெயின்ல தான் வந்தீங்களா?"

"ஆமாம். அவன் லெப்ட் சைட் படில நின்னான். நான் ரைட் சைட் படில நின்னேன்."

"அவன் விழுந்ததைப் பார்த்தீங்களா?"

"சத்தம் கேட்டப் பிறகு தான் தெரியும். அன்னைக்கு கூட்டம் வேற."

"அன்னைக்கு எந்த கலர் சட்டை போட்டிருந்தீங்க?"

"இது எங்க கம்பெனி யூனிபார்ம் சார். டெய்லி ப்ளூ கலர்தான்." சட்டைப் பையின் மேல் இருந்த கம்பெனி லோகோவை காட்டினார். ஆல்டோவும் அப்போது தான் அதை கவனித்தான். சிவப்பும் வெள்ளையும் கலந்த கிரேக்க ஆல்பா எழுத்தின் வடிவில் லோகோ. ஒரு குற்ற உணர்ச்சி வந்து சென்றது. காலையில் தான், நான் கூர்ந்து அனைத்தையும் கவனிப்பவன் எனும் சுயபெருமிதம் கொண்டு தன்னைத் தானே மனதிற்குள் மெச்சிக் கொண்டான். நம்ம இன்னும் திறமையை வளர்த்துக்கனும். எப்ப பெருமைப்பட்டாலும் உடனே ஒரு செக் பாயிண்ட் வந்திருது.

“இதுக்கு தான் இப்படி அவசரமா கூட்டிட்டு வந்தீங்களா சார்?"

"உங்க கான்டாக்ட் நம்பர் டிடெயில்ஸ் எல்லாம் கொடுத்துட்டு நீங்க கிளம்பலாம் சார்."

இருவரும் விசாரணை அறைக்கு வெளியே வந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"கிளம்பலாம்னா எப்படி? ஆபிஸ்ல ட்ராப் பண்ண சொல்லுங்க சார்."

கோபி முறைத்தார். கார்த்திக் ஆல்டோ சிரித்துக் கொண்டே டிரைவரை அழைத்து ட்ராப் செய்யச் சொன்னான்.

அவர் சென்ற பிறகு, "கோபி இரயில்வே ஸ்டேசன் சிசிடிவியில் அந்த ட்ரெயினின் ரைட்சைட் சிசிடிவி பூட்டேஜ் எல்லாம் பாருங்க. இவர் வலப்பக்க படியில் நின்றிருந்தா அதுல தெரியனும்."

"ஓகே சார்."

“இவர் எப்படிப்பட்ட நபர்ன்னு அலுவலகம், கூடப் பழகுறவங்க கிட்ட விசாரிச்சுப் பாருங்க”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 12

இணைய தரவிறக்கங்களில் 35%, ஆபாசப் படங்கள் தொடர்பானவை. இணையப் பயன்பாட்டில் 30% ஆபாச இணையதளங்கள் தொடர்பானவை.

மாம்பலம் இரயில் நிலைய மேற்கு நுழைவாயில். சுவர் முழுவதும் ஐ.ஏ.எஸ், க்ரூப் 2, நீட் தேர்வு கோச்சிங் சென்டர் விளம்பரங்கள். தமிழ்நாடு மின்வாரியத்திற்கு சொந்தமான கம்பங்களில் அடிக்கும் ப்ளூரசண்ட் கலரில் மேன்சன் விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்தன. இரயில் நிலையத்தின் உள்ளே நுழைவோருக்கு சமமான அளவில் மக்கள் வெளியேறிக் கொண்டு இருந்தனர். இதை நியூட்டன் பார்த்திருந்தால் நான்காம் விதியை வகுத்திருப்பார். ஒரு மின்சார ரயில் வந்து நின்றது. புயல் வருவதைப் போல 'ஹோ...' என்ற இரைச்சலுடன் பெருங்கூட்டம் அவசரமாக வெளியேறியது. சிறிது நேரத்தில் அந்த இடத்தின் வெப்பமே உயர்ந்தது போல இருந்தது ஆல்டோவிற்கு. மனிதக் கூட்டத்தின் வெப்பம்.

செல்வக் குமாரின் தம்பி சதீஷ் குமாரை விசாரித்தால் சில விசயங்கள் புலப்படும் என ஆல்டோவிற்கு தோன்றியது. அதற்கு வீடும் பள்ளியும் தகுந்த இடம் அல்ல. சில விசயங்கள் மறைக்கப்படுவதற்கு வாய்ப்பு அதிகம். இப்படிப்பட்ட பொது இடம் பல விதங்களில் தயக்கமின்றி வெளிப்படையாகப் பேச வைக்கும் என்பது ஆல்டோவின் அனுபவம்.

பள்ளிச் சீருடையுடன் இரயில் நிலையத்தில் இருந்து வெளிவந்த

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

சதீஷ்குமாரை அந்த கூட்டத்திலும் கண்டறிவது சிரமமாக இல்லை. வீட்டில் ஏற்கனவே சந்தித்திருந்ததால் அறிமுகம் செய்யத் தேவை ஏற்படவில்லை. ஆல்டோ அழைத்தவுடன் ஆர்வமாக வந்து பேசினான். அவனையும் பைக்கில் ஏற்றிக் கொண்டு பேசிக் கொண்டே கிளம்பினான் ஆல்டோ.

"யார் கொன்னா'ன்னு கண்டுபிடிச்சிட்டீங்களா சார்?"

“இல்ல தம்பி. எல்லாப் பக்கமும் விசாரிச்சிட்டு இருக்கோம். நிறைய தகவல் கிடைச்சிருக்கு. கூடிய சீக்கிரம் பிடிச்சிடுவோம்.”

"தயவு செய்து கண்டுபிடிச்சிடுங்க சார். அம்மா சாப்பிடாம அழுதுன்னே இருக்கு."

"அதுக்கு நீயும் கொஞ்சம் உதவி பண்ணனும். சில விசயங்களை மறைக்காம சொல்லனும்."

"எனக்கு தெரிஞ்ச விசயங்களை கண்டிப்பாக சொல்றேன் சார்"

"நீயும் உங்க அண்ணனும் வேற வேற ட்ரெயினில் தான் வருவீங்களா?”

அவனுக்கு ஒன்பது மணிக்கு ஸ்பெசல் கிளாஸ். எனக்கு ஒன்பதரைக்கு தான் ஸ்கூல். நான் அவனை விட அரைமணி நேரம் லேட்டா தான் வருவேன்.

ஆல்டோ பேசிக் கொண்டே துரைசாமி சப்வே பக்கம் செல்லாமல் எதிர்ப்புறம் பிருந்தாவன் சாலையில் சென்றான்.

"சார் ஸ்கூல் இந்தப்பக்கம்"

"இன்னும் டைம் இருக்கு வா. சாப்பிட்டு போகலாம்."
பிருந்தாவன் சாலையின் இறுதியில் இருந்த உடுப்பி ஹோட்டலுக்குள் நுழைந்தனர்.

"எனக்கு இட்லி. நீ என்ன சாப்பிடுற?”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"எதுவும் வேண்டாம் சார். நான் வீட்லயே சாப்பிட்டேன்."

"பூரி சாப்பிடுறியா. இங்க நல்லா இருக்கும்."

"ஓகே சார்."

கிழக்கு மூலையில் இருந்த டேபிளில் அமர்ந்து கொண்டனர்.

"அன்னைக்கும் நீ வேற ட்ரெயினில் தான் வந்தியா?"

"ஆமா சார்."

"உங்க அண்ணனுக்கு ஏதோ பிரச்சனை இருந்திருக்குன்னு எனக்கு தோணுது. உன் அப்பா அம்மாவும் சொல்ல மாட்றாங்க. ஸ்கூல்லயும் யாருக்கும் தெரியல. நீ தான் ஹெல்ப் பண்ணனும்"

"எப்படி சார் அவனுக்கு பிரச்சனை இருக்குன்னு கண்டுபிடிச்சீங்க?"

ஆக, ஏதோ ஒரு பிரச்சனை உண்மையிலேயே இருக்கிறது. ஆல்டோ மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

"இது போலிஸ் கண்ணு. முகத்தை வச்சே கண்டுபிடிச்சிடும்."

"சார், அவன் ஒரு பெரிய பிரச்சனையில் மாட்டியிருந்தான். இது யாருக்குமே தெரியாது. அம்மா அப்பாவுக்குமே கொஞ்சம் கொஞ்சம் தான் தெரியுமே தவிர முழுக்க தெரியாது."

"ஆனா உனக்கு தெரியும்"

"எனக்கு ஓரளவு தெரியும்."

"உனக்கு தெரிஞ்ச அளவு நீ சொல்லு."

"விமல்ன்னு ஒரு பையன் செல்வாவுக்கு பழக்கம் ஆனான். அவன் வீடு சானடோரியம் ஏரியாவில் இருக்கு. தாம்பரம் இரயில்வே ஸ்டேசனில் சமோசா விப்பான். காலேஜ் பசங்களுக்கு கஞ்சாவும் விப்பான் போல.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

அது எனக்கு ஆரம்பத்தில் தெரியல. அவன் கூட பழக ஆரம்பிச்ச பிறகு செல்வா நிறைய நாள் ஸ்கூலை கட் அடிக்க ஆரம்பிச்சான். தாம்பரம் வரை வருவான். பிறகு ட்ரெயினில் ஏறாமல் அவன் கூட சுத்தப்போயிடுவான். ஒருநாள் என்ன தான் பண்றாங்கன்னு நானும் ஒளிஞ்சு நின்னு பார்த்தேன். கூட்ஸ் ட்ரெயின் நிக்குறதுக்கு பின்னாடி போய் ரெண்டு பேரும் கஞ்சாவை சிகரெட்டில் வச்சு அடிச்சாங்க. நான் போய் செல்வாகிட்ட சண்டை போட்டேன். இதை வெளில யார்கிட்டயாவது சொன்னா கொலை பண்ணிடுவேன்னு விமல் மிரட்டுனான்."

“அப்புறம் என்ன ஆச்சு?”

"எங்க ஏரியா பசங்க நிறைய சொல்லிருக்காங்க அவனைப் பத்தி. அவன் கேங் பெரிய கேங். ரியல் எஸ்டேட், அரசியல்வாதிலாம் ஃப்ரெண்டாம். தனியா மாட்டுனா செத்தோம்னு. அதனால நான் வேற யார்கிட்டயும் இதைப் பத்தி சொல்லல.”

"அவனுக்கும் செல்வக்குமாருக்கும் ஏதாவது பிரச்சனையா?”

"ஒரு மாசம் முன்னாடி செல்வா அவனைப் பார்த்து மறைஞ்சு மறைஞ்சு வந்தான். சில நேரம் குரோம்பேட்டை வரை பஸ்ல வந்து அதுக்குப் பிறகு ட்ரெயினில் வந்தான். என்னடா ஆச்சுன்னு நான் கேட்டேன். இதுவரை கஞ்சா கொடுத்த காசு முப்பதாயிரம் ஆயிடுச்சாம். அதை அவன் கேட்குறான்னு சொன்னான். அப்படி முப்பதாயிரம் தர முடியலன்னா அவன் ஒரு பைக் கொடுப்பானாம். அதுல போய் யாரோட செயினையாவது அறுத்திட்டு வந்து அவன்கிட்ட கொடுக்கனுமாம். செல்வா ரொம்ப பயந்துட்டான்.”

"பிறகு என்ன பண்ணுனீங்க?”

"நான் தான் அவனுக்கு தைரியம் கொடுத்தேன். எங்க அம்மா அப்பாகிட்ட இரயில்வே ஸ்டேசனில் ஒருத்தன் வம்பிழுக்கிறான்னு மட்டும் சொன்னோம். என்னோட மாமா ஒருத்தர் சேலத்தில் போலீஸா இருக்கார். அந்த நேரம் அவர் சென்னை வந்திருந்தார். அவர்கிட்ட அம்மா

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

சொல்லவும், அவர் யூனிபார்மோட செல்வாவை அழைச்சிட்டு தாம்பரம் ஸ்டேசன் போனார். அங்க விமலைப் பார்த்து இனிமே இவன்கிட்ட வம்பிழுத்தா தூக்கி உள்ள வச்சிடுவேன்னு மிரட்டுனாரு. அதுக்குப் பிறகு அவன் எங்களைப் பார்த்தா முறைச்சிட்டே போய்டுவான். கிட்ட வரமாட்டான். எனக்கு என்னமோ விமல்தான் செல்வாவை உதைச்சு கீழே தள்ளிருக்கனும்னு தோணுது சார்."

"உங்கண்ணன் இறந்த பிறகு அவனைப் பார்த்தியா?"

"இப்பவும் அங்க தான் இருக்கான் சார். எப்பவும் போலவே சமோசா விக்குறான். எதுவுமே நடக்காத மாதிரி."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 13

மொபைல் போன் தேடுதல் இயந்திரப் பயன்பாட்டில் ஐந்தில் ஒரு மொபைல் போன் ஆபாசத் தேடுதலுக்காக பயன்படுத்தப் படுகின்றது.

கோட்டூர்புரம் சாலையில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இருந்து சிறிது தூரத்தில் இருந்தது அந்த பெட்ரோல் பங்க். எப்போது அந்த நூலகத்தை கடந்தாலும் உதவி ஆய்வாளர் திருவிற்கு இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி ஏற்படும். அதற்கு காரணமில்லாமல் இல்லை. படித்து முடித்துவிட்டு வேலைக்குச் செல்லாமல் வெட்டியாக சுற்றித் திரிந்த பொழுதில், வெயிலுக்கு ஒதுங்கிய இந்த நூலகம் அவரது வாழ்க்கையை மாற்றி அமைத்தது. மனதிற்கு வேலை இல்லாமல் சும்மா இருப்பது என்பது கெட்ட பழக்கங்களின் தலைக்காவிரி. அதிலிருந்துதான் மற்ற அனைத்து பிரச்சனைகளும் பெருக்கெடுத்து ஓடும். அப்படிக் குடியும் குடித்தனமுமாக இருந்த ஒரு காலத்தில் இந்த நூலகத்தில் எதேச்சையாகப் படித்த "நீங்களும் ஆகலாம் சீருடை பணியாளர்" என்ற புத்தகம் திருவின் போக்கை மாற்றியது. எந்தத் தெருக்களில் குடிகாரனாக, பிரச்சனைக்குரியவனாக அவமானப்பட்டு கூனிக்குறுகித் திரிந்தானோ அதே தெருக்களில் காவல்துறை சீருடையோடு டுப் டுப் என சத்தம் வரும் ராயல் என்ஃபீல்ட் கிளாசிக் 350ல் போவது கெத்து தானே.

பெட்ரோல் பங்க் மேலாளரிடம் தேதியையும் உத்தேச நேரத்தையும் கூறினான். அவர் தனது கம்ப்யூட்டரில் சிறிது நேரம் கட கடவென டைப் அடித்து மவுஸை இடப்பக்கம் வலப்பக்கம் என அசைத்து விட்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

மானிட்டரைத் திருப்பினார். பெட்ரோல் பங்க்கும் அதன் எதிரே உள்ள சாலைகளும் கட்டம் கட்டமாக திரையில் தெரிந்தன.

சரியாக ஒன்பது மணி பதிமூன்று நிமிடத்தில் இரு டுவீலர் களில் டேனியலும் அவன் நண்பர்களும் உள்நுழைந்தனர். பெட்ரோல் நிரப்பிய பின்பு சாலையை கடந்து எதிரே இருந்த தேநீர்க்கடையில் பைக்கை நிறுத்திவிட்டு சிகரெட் புகைத்தனர். தேநீர் குடித்துவிட்டு மீண்டும் பைக்கில் ஏறி அமர்ந்தனர். அதுவரை அவர்கள் நடத்தையில் எந்த ஒரு பரபரப்போ சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கைகளோ இல்லை. இருந்தாலும் டேனியலின் நடவடிக்கை மட்டும் இறுக்கமாகவே காணப்பட்டது. பைக்கில் ஏறி உட்காரந்த டேனியல் பைக்கில் இருந்தபடியே சிறிது எழுந்தவாறு பேண்ட் பாக்கெட்டில் இருந்த மொபைல் போனை எடுத்துப் பார்த்தான். அதில் வந்த பெயரைப் பார்த்தவுடன் அவன் முகம் மாறியது. பிறகு பின்னால் இருந்தவனை இறங்கச் சொல்லி அவசரமாக பைக்கிற்கு சைட் ஸ்டான்ட் போட்டுவிட்டு தனியே சென்று பேசினான். இரண்டு நிமிடம் பேசிய பின் இறுக்கமான முகத்துடன் பைக்கில் ஏறி கிளம்பிச் சென்றான். திரு அந்த வீடியோவை மீண்டும் மீண்டும் பார்த்தார். அப்படிப் பார்க்கும்போது தான் மற்ற அனைவரும் வழக்கம் போல பதற்றமில்லாமல் இருந்தாலும் டேனியல் ஆரம்பம் முதலே ஒரு பதட்டத்தில் இருப்பது தெரிந்தது. அந்த சிசிடிவி பதிவை ஒரு பென் டிரைவில் காப்பி செய்து கொண்டார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 14

எந்த நேரத்திலும் உலகம் முழுவதும் மூன்று கோடிப் பேர் ஆபாச இணையதளங்களைக் கண்டு கொண்டிருக்கின்றனர். ஒரு நொடிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வருமானம் ஈட்டும் துறையாக உள்ளது.

தாம்பரம் இரயில் நிலையத்தின் கிழக்குப் பகுதியில் ஒன்பதாவது நடைமேடையையும் தாண்டி இருந்தது அந்தப் பகுதி. சரக்கு இரயிலுக்கான நடைமேடை சரக்குகளை கையாள்வதற்காக சற்றே இடவசதியுடன் இருந்தது. மிகப்பெரிய ட்ரக், லாரியையும் தண்டவாளத்தின் அருகிலேயே நிறுத்தும் வண்ணம் சாலை வசதி இருந்தது. பயன்பாட்டில் இல்லாத சில இரயில் பெட்டிகள் தூசி அடைந்து தண்டவாளத்தின் பிரிவுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அதனை கடந்து சென்றால் நூற்றாண்டு கண்ட பெரிய மரங்கள் தலைவிரித்து நின்றன. சில நூறு மீட்டர் தள்ளி பரபரப்புடன் இயங்கும் இரயில் நிலையத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் மிக அமைதியாக இருந்தது அந்த இடம்.

ஆல்டோவும் திருவும் சத்தம் எழுப்பாமல் பூனை நடை நடந்து சரக்கு இரயில் பெட்டிகளின் ஊடே மறைந்து மறைந்து முன்னேறினர். தாம்பரம் இரயில் நிலைய இரயில்வேக் காவலர் ஒருவரும் உடன் வந்தார். கிழக்கு ஓரத்தின் மூலையில் இருந்த ஒரு பெரிய அரச மரத்தின் அடியில் மூன்று பேர் நின்றிருந்தனர். அதில் ஒருவனது அடையாளம் சதீஷ்குமார் கூறிய விமலின் அடையாளத்தோடு ஒத்துப்போனது. ஒரு கையில் பிளாஸ்டிக் வாளி. மற்றொரு கையில் அழுக்கடைந்த துணிப்பை. அதனுள் இருந்து ஒரு சிறிய பேப்பர் பொட்டலத்தை எடுத்து அந்த இரண்டு பேருக்கும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

கொடுத்தான். இதுதான் தகுந்த நேரம் என ஆல்டோ கண்ணைக் காட்ட மூவரும் ஒரே நேரத்தில் அவர்களை நோக்கி ஓடினர். உதிர்ந்து கிடந்த இலைகளில் அவர்களது பூட்ஸ் பட்டு சர சரவென சத்தம் எழுப்பியது. தன்னை நோக்கிச் சிலர் ஓடி வருவதைக் கண்ட விமல் பிளாஸ்டிக் வாளி, துணிப்பையை அந்த இடத்திலேயே விட்டு விட்டு ஓட ஆரம்பித்தான். இரயில் நிலைய சுற்றுச் சுவரின் ஒரு பகுதியில் செங்கல் பெயர்ந்து சிறிது உயரம் குறைவாக இருந்தது. புதர் மண்டிய அந்தப் பகுதியை நோக்கி ஓடினான். மற்ற இருவரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். இரயில்நிலையத்தை விமல் தாண்டிவிட்டால் பிடிப்பது கடினம் என்பது ஆல்டோவிற்கு தெரிந்தது.

"திரு விட்றாதீங்க." என கத்திக் கொண்டே ஓடினான். திருவோ அசுர வேகத்தில் புதர் செடிகளின் உள்ளே ஓடிக் கொண்டிருந்தார். அவன் சுவர் ஏறி குதிக்க முற்படும் போது சரியாக ஓடிச் சென்று அவனது வலது காலை பிடித்து தள்ளி விட்டார். சுவரின் உயரத்தில் இருந்து ஆ வென கத்திக் கொண்டே விழுந்தான். விழுகும் போது தரையில் ஊன்றிய கையில் சடக் என எலும்பு உடையும் சத்தம் கேட்டது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

Telegram

Click here to join my Telegram channel

Click Here to join our Telegram Group

For free eBooks, join us on Telegram

https://t.me/tamilbooksworld

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 15

ஆண்களில் 90% பேர் பதினெட்டு வயதிற்கு முன்பாகவே ஆபாச இணையதளங்களைப் பார்த்துள்ளனர். இது பெண்களில் 60% ஆக உள்ளது.

"என்ன சார் ஒரு அப்பாவியைக் கைது பண்ணி கையை உடைச்சிருக்கீங்க? என்ன நடக்குது இந்த நாட்ல? போலீஸே ஆண்டி இண்டியன் மாதிரி பிஹேவ் பண்றீங்க?"

திடீரென பான்பராக் வாயுடன் மேடையில் பேசுவது போன்ற சத்தம் கேட்டு ஆல்டோ தன் அறையில் இருந்து வெளியே வந்தான்.
உதவி ஆய்வாளர் கோபிநாத்துடன் ஒரு நபர் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். நெற்றியில் திருநீறு வைத்து பெயிண்ட் பட்டை போல அடித்திருந்தார். நடுவில் ஒரு ரூபாய் சைசில் சந்தனம் அதற்கு நடுவே ஆரஞ்சு நிற செந்தூரம். பட்டு வேட்டி, வெள்ளைச்சட்டை, பட்டு துண்டு அணிந்து ஒரு தோரணையை உண்டாக்க முயற்சி செய்திருந்தார். தோளில் இருந்த துண்டில் ஒரு கட்சியின் சின்னமும் கொடியும் இருந்தது. பின்னால் மூன்று பேர் பவ்யமாக நின்று கொண்டிருந்தனர்.

"கோர்ட்டில் ப்ரொடியூஸ் பண்ணி தான் போலிஸ் கஸ்டடி எடுத்திருக்கோம். நீங்க வேணும்னா ஜாமீன் அப்ளை பண்ணுங்க."

"கோர்ட்டாவது மயிராவது. எதுக்கு சார் அப்பாவி கையை உடைச்சீங்க?"

"அவன் தப்பிச்சு ஓடும் போது அவனே தான் உடைச்சுக்கிட்டான். நீங்க அவன்கிட்டயே கேட்டுக்கலாம்"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"ஐ வில் நாட் லீவ் திஸ் இஷ்யூ. சென்ட்ரல் மினிஸ்டர் கிட்ட பேசுறேன்."

ஆல்டோ கோபம் தலைக்கேறியது. ஒரு வெற்று நபர், தன் அலுவலகத்திற்கே வந்து தன்னை மிரட்டுவது தன்மானத்தை சீண்டியது. கோபிநாத்தை அழைத்தான்.

"கோபி, அந்தப் பையனுக்கு யார் கஞ்சா சப்ளை பண்ணுனான்னு நம்ம தேடிட்டு இருந்தோம்ல. எனக்கு என்னமோ நெருங்கிட்டோம்னு தோணுது. நீங்க ஜட்ஜ் கிட்ட பேசி வாரண்ட் ரெடி பண்ணுங்க. ஒரு விஐபி சம்பந்தப் பட்டிருக்கார்ன்னு சொல்லுங்க. லோக்கல் போலிஸ்கிட்ட எக்ஸ்ட்ரா போர்ஸ் கேளுங்க. முதல்ல வேற ஒரு கேஸில் அரெஸ்ட் பண்ணுவோம். பிறகு மர்டர் பிளஸ் கஞ்சா கேஸ் எப்.ஐ.ஆர் போடலாம்."

அப்படியே அந்த அரசியல்வாதி பக்கம் திரும்பினான்.

"காவல்துறை அலுவகத்திலேயே நீதிமன்றத்தைத் தவறாகப் பேசியதற்கு உங்களை கைது செய்றோம் சார். நீங்க பேசுன எல்லாமே சி.சி.டி.வியில் ரெக்கார்ட் ஆயிருக்கு."

பட்டு வேட்டிக்குள் கால் நடுங்குவது அனைவருக்கும் தெரிந்தது. தேர்தல் நேரம் ஏதாவது பிரச்சனை என்றால் கட்சி கழட்டிவிடவும் தயங்காது என்பது அந்த நபருக்கு தெரிந்தே இருந்தது.

"சாரி சார். பிரசர் பேஷன்ட். மார்னிங் மாத்திரை எடுக்கல. டென்சனில் தவறா பேசிட்டேன். இதைப் பெரிது பண்ணாதீங்க. மன்னிச்சு விட்ருங்க. உங்க எஸ்.ஐ தான் க்ளியரா சொல்றாரே. பையன் தப்பிச்சு ஓடும் போது விழுந்தான்னு. தப்பு பண்ணவன் தானே தப்பிச்சு ஓடனும். அவன் தப்பு பண்ணிருக்கான். நீங்க உங்க ப்ரரொசிஜர் படி பண்ணுங்க சார். ஐ வில் நாட் இண்டர்ஃபியர். அந்த கோர்ட் பற்றி பேசுன விசயத்தை அப்படியே விட்டுருங்க சார். ப்ளீஸ். நான் இங்கயே மன்னிப்பும் கேட்டுட்டேன்ல!!."

ஆல்டோவிற்கு ஆச்சரியமாக இருந்தது. எப்படி இவர்கள் ஒரு நொடிக்குள் மாறுகிறார்கள் என்று. வெளிச்சத்தில் இருந்து இருட்டுக்குள் செல்லும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

கண்கள் கூட தன்னை சரி செய்து தெளிவாக பார்க்க இரண்டு நொடி ஆகும். ஆனால் இவர்களுக்கு அது கூடத் தேவை இல்லை. அதனால் தான் இரண்டாயிரம் வருடமாக உறிஞ்சிப் பிழைக்கிறார்கள் என நினைத்துக் கொண்டான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 16

இந்தியாவில் உள்ள மொபைல் போன்களில், 24% போன்களில் ஆபாசப் படங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 90% சட்ட விரோதமாக தரவிறக்கம் செய்யப்பட்டவை.

வலது மணிக்கட்டில் கோலீஸ் பிராக்சர் மாவுக்கட்டுடன் உட்கார்ந்திருந்தான் விமல். போலிஸ் விசாரணை, சிறை எல்லாம் புதிதல்ல என்பதால் ஒருவித அசட்டைத்தனம் அவன் உடல் மொழியில் தெரிந்தது. பதிமூன்று வயதில் பிக்பாக்கெட் அடித்த போது முதன்முறை மாட்டினான். கிட்டத்தட்ட பதினைந்து வருடம் முன்பு. அதிலிருந்து இப்போது வரை மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஜெயில் என்பது வாடிக்கை. செய்த குற்றத்திற்கும், செய்யாத குற்றத்திற்கும். சேட்டுகள் திருட்டு நகை வாங்கி விற்கும் தொழிலின் கைது கணக்கிற்கு இவனை அனுப்புவர். அதேபோல திருட்டு சீடி விற்கும் கடைக்காரர்களின் கேஸ் கணக்கிற்காகவும் செல்வான். வேறு யாருமே கிடைக்காவிட்டால் காவல்துறையே அவசரத்திற்கு இவனை கைது செய்து கணக்குக் காட்டும். இப்படி கூலிக்குச் சிறைக்குச் செல்வதை விட சொந்தமாகத் தானே தொழில் செய்து சிறைக்கு செல்வது லாபகரமாக இருப்பதைப் புரிந்து கொண்டான். ஆரம்பத்தில் சென்னையில் இருக்கும் மொத்த வியாபாரிகளிடம் கஞ்சா வாங்கி விற்றவன் பிறகு தேனி, ஆந்திரா சென்று தானே கஞ்சாவை வாங்கி, விற்க ஆரம்பித்தான். அவனது களம் இரயில் நிலையங்கள். அதற்கு நிறையக் காரணங்கள் இருந்தன. கூட்டமான இடம், பரபரப்பான மனிதர்கள், சிறிது பயிற்சி இருந்தால் போதும், நுழைவு வாயில் தவிர வேறு பல வழிகளில் உள்ளே நுழையலாம், வெளியே

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

செல்லலாம். போலிஸ் தொந்தரவு குறைவான இடம். புது கஸ்டமர்களை எளிதில் பிடிக்கலாம். பழைய கஸ்டமர்களும் தொடர்பு கொள்வது எளிது. தன் தொழிலுக்கு ஒரு பாதுகாப்பு வேடமாக சமோசா விற்பதையும் மேற்கொண்டான். பிளாஸ்டிக் வாளியின் அடிப்புறம் கஞ்சா பொட்டலங்கள், போதை மாத்திரைகள். அதன் மேல் செய்தித்தாள். அதற்கு மேல சமோசா. பிளாஸ்டிக் வாளியில் இருந்து சிறிய எண்ணிக்கையில் கஞ்சா பொட்டலம் கையில் இருக்கும் துணிப்பைக்கு மாறும். விற்றுத் தீர்ந்த பிறகு மறைவான இடத்தில் மீண்டும் பிளாஸ்டிக் வாளியில் இருந்து எடுத்து வைத்துக் கொள்வான்.

தன் தொழிலுக்கு கூட்டணியோ வேலையாட்களோ கிடையாது. ஆனால் சானட்டோரியம் ஏரியாவின் பிரபல தாதாவான "முட்டை சங்கரு"க்கு மாதாமாதம் ஒரு அமவுண்ட் கொடுத்து விடுவான். முட்டை சங்கர் இவனைக் காவல்துறையிடம் இருந்தும், மற்ற பெரிய ரவுடிகளிடம் இருந்தும் காப்பதற்கான சர்வீஸ் சார்ஜ் இது. இது போக ஒரு கட்சியிலும் உறுப்பினராகி அவ்வப்போது நன்கொடை, மாநாட்டு நிதி கொடுப்பான். அது என்னமோ நாற்காலிக்கு இறைத்த நீராகத்தான் போகும். ஆனால் நெற்றியில் செந்தூரம் வைத்துக்கொண்டு, தெருவில் கும்பலாக கத்திக் கொண்டே செல்வது ஒருவித போதையைக் கொடுத்தது.

தமிழகத்தில் குட்கா தடை செய்யப்பட்ட போது இவனது வியாபாரம் கொடிகட்டிப் பறந்தது. புதிது புதிதாக நிறையப் பேர் தேடி வந்து வாங்கினார்கள். என்ன விலை சொன்னாலும் மறுபேச்சின்றி விற்றது. நாட்கள் செல்லச் செல்ல தொழிலிலும் போட்டி அதிகமானது. நிறைய பேர் புதிதாக இரயிலில் சமோசா விற்க ஆரம்பித்தனர். இரயிலுக்கு வெளியே கஞ்சாவும். ஆனால் சில மாதங்களிலேயே குட்கா தடை பேப்பரில் மட்டுமே இருக்கும் விசயமாக ஆனது. முன்னைவிட பல இடங்களில் தாராளமாக கிடைத்தது. இவனது வியாபாரமும் குறைந்தது. ஆனால் பழைய பழக்கத்திற்கே அனைவரும் "கப்பம்" எதிர்பார்த்தனர்.

விமலுக்கு பிசினஸ் உத்தியை மாற்ற வேண்டியக் கட்டாயம் புரிந்தது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

கடன், இ.எம்.ஐயில் கஞ்சா விற்றான். கூடவே சில போதை மாத்திரைகளையும். கையில் காசில்லாத கல்லூரி மாணவர்கள் வாங்கினார்கள். சில இழப்புகள் இருந்தாலும் தொழில் சுமாராக நடந்தது.

அப்போது தான் முட்டை சங்கர், விமலோடு ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தான். அதாவது அவன் செய்யும் ரியல் எஸ்டேட், கட்டப் பஞ்சாயத்து போன்றவற்றிற்கு நல்ல திடகாத்திரமான இளைஞர்களை சப்ளை செய்ய வேண்டும். அதற்கு பதில் ஒரு ஆளுக்கு இவ்வளவு என மொத்தமாக விமலிடம் பணம் கொடுத்துவிடுவான். தன்னிடம் போதை மாத்திரை, கஞ்சா வாங்கி பணம் கொடுக்காத கல்லூரி மாணவர்களை முதலில் இதற்குப் பயன்படுத்தினான்.

காரியம் மிக எளிது. முட்டை சங்கர் ஆஸ்தான அலுவலகமான ஒரு முடி திருத்தும் கடையில் காலையில் ஆஜராக வேண்டும். ஸ்கார்பியோ, சுமோ போன்ற கார்களில் ஏற்றிக் கொண்டு கட்டப் பஞ்சாயத்து நடக்கும் இடங்களுக்கு செல்வர். அங்கு எதிர்த்தரப்பும், ஆட்களுடன் வரும். 99% அடிதடிப்பிரச்சனை இன்றி பேச்சு வார்த்தை மூலமே முடிவுக்கு வந்துவிடும். இருந்தாலும் யார் பக்கம் அதிக ஆட்கள் உள்ளனரோ அவர்கள் பக்கம் தான் சாதகமாக முடியும் என்பது எழுதப்படாத விதி. அதேபோல ஆக்கிரமிப்பு இடங்களில் திடீரென ஆட்களுடன் சென்று வேலி போடுவது, மற்றவர் போடும் வேலியை பிரித்துப் போடுவது என அதிரடிகளும் நடக்கும். இது போக மிரட்டல், கடன் வசூலும் உண்டு. இவற்றிற்கெல்லாம் பின்னால் நிற்க நபர்கள் தேவை. பெரும்பாலான சமயங்களில் காவல்துறைக்கே விசயம் செல்லாது. அதனால் வழக்கோ வேறு எந்தப் பிரச்சனைகளோ வராது. காலையில் சென்றால் மாலையில் திரும்பிவிடலாம். இடையில் பிரியாணி, சரக்கும் உண்டு. கைநிறைய காசும் கிடைக்கும். கஞ்சா கடனிற்கான பணத்தை எடுத்துக் கொண்டாலும் மீதி கைச் செலவிற்கு ஆகும்.

இதனால் கல்லூரி மாணவர்களிடையே இந்த வாய்ப்பிற்கு போட்டி அதிகம். கடனில் கஞ்சா வாங்கிவிட்டு, இப்படி வார இறுதியில் வேலை(??) செய்து அடைத்துவிடுவர்.

ஆனால் சில மாணவர்கள் விமலை பைபாஸ் செய்து நேரடியாக முட்டை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

சங்கருடன் பழக்கம் ஏற்படுத்திக் கொண்டனர்.
அதன்பின் விமல் கண்டறிந்த புது உத்தி தான் செயின் திருட்டு. பத்து நிமிட வேலை ஒரு மாதம் போதை. இரண்டு, மூன்று திருட்டு இருச்சக்கர வாகனங்களை வாங்கி வைத்துக் கொண்டான். காசு இல்லாத கல்லூரி மாணவர்களிடம் அவற்றைக் கொடுத்து தங்கச் சங்கிலிகளைத் திருடி வரச்செய்வான். அவற்றிற்கு பதில் கஞ்சா சப்ளை செய்வான். சிலநேரம் ஏழு சவரன் எட்டு சவரன் நகைகள் கூட கிடைக்கும். அவற்றின் மதிப்பு லட்சக்கணக்கில் இருக்கும். மார்வாடி சேட்டுகளிடம் அடிமாட்டு விலைக்கு விற்றாலும் கணிசமான தொகை கைகளில் நிற்கும். சிலநேரம் சிலர் அவர்களாகவே நகையைத் திருடி இவனிடம் விற்பதும் உண்டு. அதிலும் ஒரு பிரச்சனை வந்தது. நகைத்திருட்டு வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வைரலாகின. சிசிடிவி கேமரா பதிவுகளை வைத்து போலிசார் விரட்டி விரட்டி வேட்டையாடினர். அடிக்கடி பேப்பரில் வருமே சங்கிலிப் பறிப்பில் ஈடுபட்ட கல்லூரி மாணவர்கள் கைது அப்படின்னு. அதெல்லாம் இவர்கள் போன்றோர் தான்.

நகை திருட்டுக்குப் பயந்து பெரும்பாலான பெண்கள் போலி கவரிங் நகைகளை அணிய ஆரம்பித்தனர். போலிஸ் தொல்லை, போலி நகை என பல பிரச்சனைகள் வந்ததால் இவர்களும் நகையில் இருந்து செல்போனுக்கு மாறிவிட்டனர். செல்போன் பறி கொடுத்தவர்கள் பெரும்பாலும் போலிசுக்குச் செல்வதில்லை. அப்படிச் சென்றாலும் போலிசும் நகைத் திருட்டு அளவு முக்கியத்துவம் கொடுத்து விசாரிப்பது இல்லை. என்ன ஒன்று, செயின் பறிப்பில் ஐம்பதாயிரம், ஒரு லட்சம் என கிடைத்தால் செல்போன் திருட்டில் ஐந்தாயிரம், பத்தாயிரம் தான் கிடைத்தது. இதற்கும் மாற்றுவழியைத் தான் விமல் யோசித்துக் கொண்டிருக்கிறான். கூடிய விரைவில் கண்டுபிடித்துவிடுவான். ஆனால் அதற்குள் தான் கைது செய்து விட்டனரே. இன்னும் மூன்று மாதத்திற்குத் தொல்லை தான் என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 17

உலக அளவில் ஆபாச இணையதளங்களைப் பயன்படுத்துவதில் முதல் மூன்று இடங்களில் உள்ள நாடுகள் 1. அமெரிக்கா, 2. இங்கிலாந்து, 3. இந்தியா.

ஆல்டோ, விமலின் முழு வரலாறு அடங்கிய ஃபைலையும் படித்து முடித்தான். பெரிய பிஸினஸ் மேக்னட்டா இருப்பான் போல என நினைத்துக் கொண்டான். சட்டத்திற்கு புறம்பான தொழிலில் எவ்வளவு நுணுக்கங்களைப் புகுத்தியுள்ளான்? அவனை அடைத்து வைத்திருந்த அறைக்குள் நுழைந்தான். கையில் கட்டுடன் அலட்சியமாக ஆல்டோவை எதிர்கொண்டான் விமல்.

"எத்தனை வருசமாக கஞ்சா விக்குற?"

"பத்து வருசமா"

தயங்காமல் பதில் வந்ததும் ஆல்டோ ஆச்சரியமடைந்தான். அவனது குற்ற வரலாறு, அலட்சிய உடல்மொழியால் வாய் திறந்து உண்மை பேச வைப்பது கடினம் என்று தான் நினைத்திருந்தான். ஆனால் விமலின் அனுபவமோ வேறு மாதிரி இருந்தது. உடல் தான் அவனுக்கு இருக்கும் ஒரே முதலீடு. அதைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். போலிசோடு இணக்கமாகச் சென்றுவிட்டால் சேதாரம் குறைவு என்பது அவன் அனுபவத்தில் கண்டறிந்தது. அதனால் என்ன விசாரணை என்றாலும் தயங்காமல் பதில் கூறிவிடுவான்.

செல்வக்குமாரின் புகைப்படத்தை காட்டினான் ஆல்டோ.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"இது யாருன்னு தெரியுதா?"

"தெரியும். செல்வக்குமார். இருபத்தஞ்சாயிரம் கொடுக்காம எஸ்கேப் ஆயிட்டான், பாடு."

"அதுனால அவனை கொலை பண்ணிட்ட?"

விமல் அதிர்ச்சி அடைவது அவன் முகத்தில் தெரிந்தது. அதுவரை சாதாரண கஞ்சா கேஸ் என்று தான் நினைத்திருந்தான். கொலை என்ற உடன் உடல் முழுவதும் பயம் பூசியது. கேஸ் எதுவும் இல்லாமல் சும்மா சிக்கினாலே மூணுமாசம் ஊற வைத்து செய்வார்கள். இப்ப கொலைன்னு சொல்றாங்களே. இன்னும் ரெண்டு வருசத்துக்கு புழல் தான். சரி புழலில் ஒரு பிராஞ்ச் போடுவோம் என மனதிற்குள் நினைத்துக் கொண்டான்

"கொலையா? நான் எதுவும் பண்ணல சார்."

"நீ அவனை முப்பதாயிரம் கேட்டு மிரட்டுனியா இல்லையா?"

"ஆமா சார். பின்ன பிஸினஸ் பண்ணிட்டு காசு கொடுக்காம போன சும்மா விடுவாங்களா?"

கூட இருந்த திரு சப்பென அறைந்தார்.

"என்னடா பிஸினசு... காலேஜ் பசங்களுக்கு கஞ்சா விக்குறதை பெரிய கப்பல் யாவாரம் மாதிரி பேசுற. பிஸினசாம் பிஸினசு"

"அதான் நீங்க கேட்குறதுக்கெல்லாம் சொல்றேன்ல. அடிக்காதீங்க சார்." அழுதுகொண்டேக் கூறினான்.

ஆல்டோ திருவை கையமர்த்தி விட்டு விமலிடம் கேட்டான்.

"மிரட்டுனியா இல்லையா?"

“அவன் முப்பது ஆயிரம் தரனும். ஒரு தபா அஞ்சாயிரம் கொடுத்தான் சார். மீதி இருபத்தஞ்சு ஆயிரம் தரனும். அதைக் கொடுக்காம போலிசை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

இட்டுன்னு வந்தான் சார். சனியன் போய்த் தொலைன்னு விட்டுட்டேன்."

"கடைசியா அவனை எப்பப் பார்த்த?"

"ஒரு பதினஞ்சு நாள் முன்னாடி. டேசனான்ட பார்த்தேன். மொறைச்சேன். ஓடிட்டான்."

"கஞ்சா வாங்க அவன் கூட வேற யாரும் வருவாங்களா?"

"இல்ல சார். அவன் மட்டும் தான் வருவான்."

"பணம் கொடுக்கலைன்னு முட்டை சங்கர் கிட்ட சொல்லி போட்டுத் தள்ளிட்டியா?"

"சார் மாசம் ஒரு லட்சம் மாமூலுக்கு மட்டும் ஆகுது. எனக்கு பிஸினஸ் ஆகுதோ இல்லையோ... (நாக்கைக் கடித்துக் கொண்டான்) நான் விக்குறனோ இல்லையோ ஒன்னாம் தேதி ஆனா ஒரு லட்சம் கொடுத்தே ஆகனும். இந்த இருபத்தஞ்சு ஆயிரத்துக்கு எல்லாம் கொலை பண்ணுனா தொழில் பண்ணவே முடியாது சார்."

"அப்ப பணம் காரணம் இல்ல. வேற என்ன காரணம்? அவன் போலிசோட வந்தது உனக்கு பிடிக்கலை. அப்படித்தானே?"

"என்ன சார் நான் தான் கொன்னேன்னு முடிவே பண்ணிட்டீங்களா? நான் கொல்லலை சார். நீங்க சொல்லி தான் அவன் செத்த விசயமே தெரியும். எப்படிச் செத்தான் சார்?"

"திங்கள் கிழமை காலை ஒன்பது மணிக்கு எங்க இருந்த?"

"திங்கள் கிழமையா சார்? டேசன்ல இருந்தேன் சார்."

"ஸ்டேசன்ல இருந்தியா? இல்ல ட்ரெயினில் போனியா?"

"சரியா நியாபகம் இல்லை சார். எப்பவும் காலையில் பதினோறு மணி வரை டேசன், ட்ரெயின்னு மாறி மாறி இருப்பேன் சார்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

“எது வரை ட்ரெயினில் வியாபாரம் பண்ணுவ?"

"தாம்பரம் டு கிண்டி எங்க ஏரியா சார். கிண்டி டேசன்ல இறங்கி ரிடர்ன் வந்திடுவேன்."

"திங்கள் கிழமை காலையில் மவுன்ட் ஸ்டேசனில் ஒரு பையன் ட்ரெயினில் அடிபட்டு செத்தான். தெரியுமா?"

"தெரியும் சார். அன்னைக்கு ட்ரெயின் லேட்டு. செம கூட்டம். உள்ள பூந்து சமோசா விக்கக் கூட முடில. அவன் சுவத்தில் இடிச்சு செத்தான்னு சொன்னாங்க. ஆனால் நான் பார்க்கல. அதான் மாசத்துக்கு நாலு பேர் சாவுறாங்களே.”

"அப்ப நீயும் அந்த ட்ரெயினில் தான் இருந்திருக்க?"

"அன்னைக்கு செத்தவன் அவன் தானா?"

தலையில் கையை வைத்தான். வகையாய் மாட்டிக் கொண்டோம். இந்த ஒரு பாயிண்ட்டை வைத்து நம்ம தலையில் எல்லா கேஸையும் எழுதி கணக்கை முடித்துவிடுவார்கள். புள்ளி வச்சாலே கோலம் போடுவானுங்க. இன்னைக்கு காலம், கோலம் போட்டு அதுக்கு கலர் அடிச்சு வச்சிருக்கு. இனிக்கு ஆயுசுக்கும் புழல் தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 18

இந்தியாவில் இருந்து தினமும் ஆறு கோடியே எண்பது இலட்சம் ஆபாச குறிச் சொற்கள் இணையத்தில் தேடப்படுகின்றன.

“சார், விமல் சொல்றதுல லாஜிக் இருக்கு. இவன் மாதிரி தொழில் பண்றவனுங்க இருபத்தைந்து ஆயிரத்திற்கு எல்லாம் கொலை பண்ண மாட்டானுங்க. நீங்க என்ன நினைக்குறீங்க?” ரெக்கார்ட் செய்யப்பட்ட வாக்குமூலத்தை மானிட்டரில் பார்த்தபடியே கோபி கேட்டார்.

"கரெக்ட் தான் கோபி. ஆனால் இப்படி யோசிச்சு பாருங்களேன். இவன் ட்ரெயினில் போயிருக்கான். அந்த நேரம் அவனும் படியில் நின்றிருக்கான். பணமும் கொடுக்காம, போலீஸை வச்சு மிரட்டுன கோபம் இவனுக்கு இருக்கு. இப்ப சரியான வாய்ப்பு. யாருக்கும் தெரியப்போறது இல்லை. தள்ளி விட்டுட்டான்."

"அவன் கொலை பண்ணனும்னு தனியா மெனக்கெட்டு செய்யல. கிடைச்ச வாய்ப்பைப் பயன்படுத்திக்கிட்டான். அப்படித் தானே."

"இருக்கலாம். ஏன்னா இந்த மாதிரி லாங் கிரிமினல் ஹிஸ்டரி இருக்கவங்க, விசாரணையில் பதட்டப்படாமல் பொய் சொல்வாங்க. அவங்க சொல்றது உண்மையா பொய்யான்னு நம்ம கண்டுபிடிக்கிறது சிரமம்."

"அப்ப இன்னும் கிளறிப்பார்க்கனும்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"கண்டிப்பா. நீங்க எல்லா ஸ்டேசன் சி.சி.டி.வி ஃபூட்டேஜ்ஜும் வாங்கிப் பாருங்க. எலக்ட்ரிக் ட்ரெயினில் ஒரு பெட்டியில் இருந்து இன்னொரு பெட்டிக்குப் போக முடியாது. இந்த மாதிரி சமோசா, சுண்டல் விக்குறவங்க ஒவ்வொரு ஸ்டேசன்லயும் இறங்கித் தான் அடுத்த பெட்டிக்கு மாறுவாங்க. இவன் எந்த ஸ்டேசனில் எந்தப் பெட்டியில் இருந்தான்னு டிடெயிலா ஒரு சார்ட் ரெடி பண்ணுங்க. அந்தப் பெட்டியில் வேற வெண்டார் யாரும் ஏறுறாங்களான்னும் பார்த்திருங்க. இவன் கூட சுத்துற மத்த பசங்களையும் விசாரிக்கனும்."

"ஓகே சார். இவன் ஃப்ரெண்ட்ஸ், கூட வியாபாரம் பார்க்கிற மத்த பசங்க லிஸ்ட் எற்கனவே ரெடி பண்ணிட்டோம்."

"திரு அந்த டேனியல் பத்தி விசாரிச்சுப் பார்த்தீங்களா? 9 மணிக்கு அவனுக்கு எங்க இருந்து கால் வந்தது?"

"அவன் நம்மகிட்ட கொடுத்த நம்பர் இல்லாமல் இன்னொரு நம்பரும் யூஸ் பண்றான். ஆனால் அந்த நம்பரும் அவன் ஆதார் கூட லிங்க் ஆயிருக்கு. அதுல தான் கால் வந்திருக்கு. விசாரிச்சுப் பார்த்தோம். அவன் ஒரு பொண்ணை லவ் பண்றான் போல. அவங்களுக்கு இடையில் ஏதோ பிரச்சனை. அந்தப் பொண்ணு தான் கால் பண்ணிருக்கு."

"அதான் படபடப்பா இருந்தானா வீடியோல? வேற ஏதாவது சந்தேகப்படும்படி மூவ்மெண்ட்?"

"இதுவரை ஒன்னும் இல்ல சார். இருந்தாலும் மஃப்டியில் நம்ம கான்ஸ்டபிள் ஒருத்தர் ஃபாலோ பண்றார்."

"செல்வக்குமார் சித்தப்பா திருப்பூர்ல தான் இருந்தாரா? செக் பண்ணுனீங்களா?"

"பண்ணிட்டோம் சார். அங்க தான் இருந்திருக்கார்."

"சாட்சிக்காக வேணும்னே கூட அங்க போய் தங்கியிருக்கலாம். யாரையும்

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

நம்ப வேண்டாம். ஃபோன்கால், பேங்க் டிரான்ஷாக்சன் எல்லாம் பாருங்க. சந்தேகப்படுற மாதிரி பெரிய அமௌண்ட் எதுவும் கைமாறியிருக்கான்னு பாருங்க. கூலிப்படை, அடியாள் சகவாசம் இருக்கான்னு பாருங்க. முக்கியமா நார்த் சென்னை கேங்க் எது கூடவாது அவர் பேசியிருக்காரான்னு பாருங்க."

"ஓகே சார். அந்த நீலச்சட்டை ட்ரெயினில் வலது பக்கம் தான் நின்று வந்திருக்கார் சார். சி.சி.டி.வி வீடியோல தெரியுது."

"வீடியோ அவரைக் கண்டுபிடிக்கிற அளவு தெளிவா இருக்கா?"

"முகம் தெளிவாத் தெரியல சார். ஆனால் ப்ளூ சட்டை, பாடி லாங்குவேஜ் இதெல்லாம் பார்த்தா அவர் மாதிரித் தான் தெரியுது. எக்ஸ்பட் ஒப்பினியனுக்கு அனுப்பிருக்கோம் சார்."

"அப்போ அவர் கொலை பண்ணியிருக்க வாய்ப்பு இல்ல?"

"கொலை நடந்த இடம் பரங்கிமலை இரயில் நிலையத்தில் இருந்து நூறு மீட்டர் தொலைவில் இருக்கு. இரயில் நிலையத்தில் இருந்து இரயில் கிளம்பி சரியாகப் பதினைந்து நொடிகளில் அந்த இடத்தை அடைந்து விட்டது. அதற்குள் வலது பக்க படியில் நின்ற இவர் கூட்டத்திற்குள் புகுந்து இடது பக்கம் சென்று செல்வக் குமாரைத் தள்ளி விட்டு மீண்டும் வலப்பக்கம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அது மட்டும் இல்லாம இவர் இந்த மாதிரி அடிக்கடி சண்டை போடுவாராம். பெர்ஃபெக்ஷனிஷ்ட் போல."

"கிட்டத் தட்ட நூறு பேருக்கு மேல விசாரிச்சுப் பார்த்துட்டோம். இதுவரை நமக்கு ஒன்னும் தேறல. இனி நமக்கு கொஞ்ச ஆப்ஷன் தான் இருக்கு. நீங்க அந்தப்பையனோட காணாம போன செல்போன் பத்தி விசாரிச்சுப் பாருங்க. ஏதாவது க்ளூ கிடைக்குதான்னு பார்ப்போம்"

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 19

உலக அளவில் ஆபாசத் தேடலில் முதல் பத்து இடங்களில் உள்ள நகரங்களில் ஆறு இந்திய நகரங்கள்.

மாநில குற்றத் தடுப்பு இயக்குநர் அலுவலகம். இயக்குநர் அருள்மொழி அழைத்திருந்தார். எதற்கு என ஆல்டோவிற்கு தெரிந்திருந்தது. ஆனால் என்ன பதில் சொல்வது என்று தான் தெரியவில்லை.

“காலை வணக்கம் ஆல்டோ.”

“காலை வணக்கம் சார்”

“மவுண்ட் ஸ்டேசன் கேஸ் எந்த நிலையில் இருக்கு?”

“நிறையப் பேரை விசாரிச்சுருக்கோம் சார். புது லீட் நிறைய கிடைச்சிருக்கு சார்.”

“ஏதாவது Breakthrough?”

“பிரேக் த்ரோ'ன்னு சொல்ல முடியாது. ஆனா முன்னேற்றம் இருக்கு சார்.”

“இரயில்வே ஐ.ஜி செந்தாமரைக் கண்ணன் கால் பண்ணியிருந்தார். அவங்க மேலிடத்தில் இருந்து நிறைய பிரஷராம்.”

“புரியுது சார்”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

“இப்ப வரை விபத்து அப்படின்னு வெளில தெரியுறதால அவங்களுக்கு கெட்ட பெயர். மீடியாவை சமாளிக்க முடியலயாம்.”

“கூடிய சீக்கிரமே கேஸ் முடிஞ்சிரும் சார்.”

“எக்ஸ்ட்ரா ஆளுங்க வேணும்னாலும் தயங்காம கேளுங்க.”

“இப்ப இருக்க டீமே நல்ல டீம் சார். விரைவில் உங்களை நல்ல செய்தியுடன் சந்திக்கிறேன்.”

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 20

இந்தியா 827 ஆபாச இணையதளங்களைத் தடை செய்துள்ளது. இவை இந்தியாவின் 35% இணையப் பயன்பாட்டிற்கு காரணமாக இருந்த தளங்கள்.

"சார் இந்த போன் திருட்டு போன்னு தெரியாது சார். ரிச்சி ஸ்ட்ரீட்ல தான் வாங்குனேன். வேணும்னா அந்தக் கடையிலயே கேட்டுப் பாருங்க சார்." அந்த நபர் கூறிக்கொண்டு இருக்கும் போதே ஆல்டோ நுழைந்தான்.

"சார் திருடு போன செல்வக்குமாரோட மொபைலை இவன் தான் இப்ப யூஸ் பண்றான் சார். ஐ.எம்.இ.ஐ நம்பர் வச்சு ட்ரேஸ் பண்ணுனோம்." விஷ் அடித்துவிட்டு கோபி கூறினார்.

கட்டிட வேலை பார்க்கும் வடமாநில தொழிலாளி. நன்றாகத் தமிழ் பேசினான். தமிழகம் வந்து பல வருடம் ஆகும் போல.

"எந்த ஊர் நீ?"

"கோரக்பூர் சார். யூ.பி. போன வருசம் ஆஸ்பிட்டல்ல குழந்தைங்க செத்துச்சே. அந்த ஊர்."

"இங்க வந்து எத்தனை வருசம் ஆகுது?"

"ஏழு வருசம் சார். பொண்டாட்டி புள்ளலாம் ஊர்ல இருக்காங்க. வீடியோ கால் பேசலாம்னு இந்த போன் வாங்குனேன்."

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

"எங்க வேலை பாக்குற?"

"முன்னாடி மேடவாக்கம்ல ஒரு பில்டிங் காண்ட்ராக்டர்ட்ட ஒர்க் பண்ணுனேன். இப்ப மெட்ரோ ட்ரெயின் ஒர்க் சார்."

"தமிழ் நல்லா பேசுற?"

"இங்க வந்தா கத்துக்கிற வேண்டியது தான சார்?"

"எங்க தங்கியிருக்க?"

"தவுஜண்ட் லைட் ஏரியா சார்"

"இந்த ஃபோன் எந்தக் கடையில் வாங்குன?"

தனது பாக்கெட்டில் இருந்த பர்ஸை ஐந்து நிமிடம் குடைந்து பல கட்ட சோதனைகளுக்குப் பின் ஒரு கசங்கிய விசிட்டிங் கார்டை எடுத்து தந்தான்.

புதிய பழைய மொபைல் போன்கள் குறைந்த விலையில்

வாங்க, விற்க

மொபைல் பேலஸ்

மொபைல் போன் சர்வீஸ் செய்யப்படும்.

நம்பர் 74, கணேஷ் பிளாசா, நரசிங்கபுரம் தெரு,

சிந்தாதரிபேட்டை, சென்னை - 2.

மருத்துவமனையாக மாற்றப்பட்ட புதிய தலைமைச் செயலக

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

கட்டிடத்திற்கு நேர் எதிரே அமைந்திருந்தது அந்த காதி பவன். அதன் வாசலில் அதிசயமாக பார்க்கிங் செய்ய இடம் கிடைத்தது. இல்லை எனில் வாலாஜா சாலை D1 ட்ரிப்ளிகேன் ஸ்டேசனில் வண்டியை நிறுத்திவிட்டு நடந்து வர வேண்டும். காரை நிறுத்திவிட்டு ஆல்டோவும் கோபியும் நடந்தார்கள். ரிச்சி தெருவின் இருபுறமும் இருச்சக்கர வாகனங்கள் ஆக்கிரமித்திருந்தன. பெரிய பெரிய அட்டைப் பெட்டிகளை ஏற்றிக் கொண்டு ட்ரை சைக்கிள்காரர்கள் சிறிய இடங்களுக்குள் நுழைந்து வித்தை காட்டிக் கொண்டிருந்தனர். ஒரு டாடா ஏஸ் முன்னேறவும் வழியில்லாமல் பின்னால் செல்லவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தது. அதன் பின்னே "ஹார்ன் அடித்தால் ட்ராபிக் சரியாகும்" மதத்தைச் சேர்ந்த சிலர் விடாமல் ஹார்ன் அடித்து பேட்டரியை வீணாக்கிக் கொண்டிருந்தனர். இடதுபுறம் நரசிங்கபுரம் தெருவில் வளைந்து கணேஷ் பிளாசாவில் இருந்த புறாக்கூண்டு மொபைல் பேலஸ் கடையைக் கண்டுபிடித்தனர்.

காக்கி யூனிபார்மைப் பார்த்தவுடன் கடையில் இருந்தவர் எழுந்து நின்றார் - இப்படி எழுதுவது க்ளிசே'வாகத் தான் தோன்றுகிறது. என்ன செய்ய, அவர் அப்படித்தான் எழுந்து நின்றார். அதைத் தானே எழுத முடியும்? காக்கி யூனிபார்மைப் பார்த்தவுடன் கடையில் இருந்தவர் எழுந்து நின்றார்.

"நீங்க தான் ஓனரா?" ஆல்டோ ஆரம்பித்தான்.

"ஆமா சார்."

"திருட்டு போன்லாம் விக்குறீங்கலா?"

"செகண்ட்ஸ்ல போன் விக்குறோம் சார். ஆனா திருட்டு போன்லாம் விக்கிறது இல்ல."

"அப்ப இந்த போன்? ஒரு நார்த் இண்டியனுக்கு வித்திருக்கீங்க."
வாங்கி சிறிது நேரம் உற்றுப் பார்த்தார்.

"ஞாபகம் இருக்கு சார். ஒரு ஸ்கூல் பையன் தான் வித்தான். அவன் போன் தான் அது. பில் செக் பண்ணிட்டு தான் வாங்குனோம். திருட்டு

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

போன் இல்ல.”

"நல்லாத் தெரியுமா?”

"நம்பலைனா ஒரிஜினல் பில் கூட காட்டுறேன். ஃபைல்ல இருக்கும். டேய் அந்த பில் ஃபைலை எடுடா." வேலைசெய்யும் சிறுவன் ஒரு ஃபைலை கொண்டுவர கோபி ஒவ்வொரு பில்லாக பார்க்க ஆரம்பித்தார்.

"வித்த பையனை அடையாளம் காட்டுவீங்களா?" ஆல்டோ.

"காட்டுவேன் சார். ரெண்டு வாரம் முன்னாடி கூட இன்னொரு போன் விக்க வந்தான். ஆனா நான் வாங்கல.”

"இவனாப் பாருங்க?” செல்வக் குமாரின் போட்டோவை காட்டினான்.


"இவன் தான் சார். கடைசி முறை இவன் தம்பியையும் கூட கூட்டிட்டு வந்தான்.”

"அப்ப திருட்டு போன் இல்ல.”

"திருட்டு போன்னா இப்படி தைரியமா உங்ககிட்ட பேசிட்டு இருப்பனா சார்?” ஆல்டோவின் மனதிற்குள் பொறி தட்டியது.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks




**Click Here to join our Telegram Group**

**For free eBooks, join us on Telegram**

**https://t.me/tamilbooksworld**

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 21

இந்தியா பல ஆபாச இணையதளங்களைத் தடை செய்தாலும், அவற்றைப் பார்ப்போர் எண்ணிக்கை அதன்பிறகும் அதிகரித்துக் கொண்டே தான் செல்கிறது. வி.பி.என் எனப்படும் விர்ச்சுவல் ப்ராக்ஸி நெட்வொர்க் மூலமும், மிரர் சைட் எனப்படும் பிரதிபலிப்பு தளங்கள் மூலமும் தடை செய்யப் பட்ட இணையதளங்களைப் பார்க்க முடியும் என்பது தான் இதற்குக் காரணம்.

ஆல்டோ தனது கம்ப்யூட்டர் திரையில் இரயில் நிலையங்களில் இருந்து எடுக்கப்பட்ட அனைத்து சிசிடிவி காட்சிகளையும் திரும்பத் திரும்ப பார்த்துக் கொண்டிருந்தான். ஆல்டோவின் அறைக்கு வெளியே கோபியும் திருவும் பேசிக்கொண்டு இருந்தனர்.

"முக்கிய சஸ்பெக்ட் எல்லாரையும் விசாரணைக்கு கொண்டு வந்தாச்சு. ஆனால் யார் மேலயும் உறுதியான ஆதாரமும் இல்லை. அதேசமயம் விலக்கவும் முடியல. கேஸ் ரொம்ப சிக்கலா இருக்கு" திரு ஆரம்பித்தார்.

"அதான் நம்ம கிட்ட வந்திருக்கு. இல்லைனா இரயில்வே போலிஸ் கொடுப்பாங்களா?"

"காலையில் இருந்து ஆல்டோ திரும்பத் திரும்ப இரயில்வே ஸ்டேசன் சி.சி.டி.வி வீடியோவை பார்த்திட்டே இருக்காரே"

"ஏதோ ஒன்னு கண்டுபிடிச்சிருப்பார்ன்னு நினைக்குறேன்."

திடீரென ஆல்டோ அறையை விட்டு வெளியே வந்தான்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

“வாங்க போகலாம். கேஸ் முடியப் போகுது.” அலுவலகம் பரபரப்பானது.

தாம்பரம் இரயில் நிலையத்தின் கிழக்குப் பகுதி. சரக்கு இரயில் தண்டவாளத்தைத் தாண்டி இருக்கும் புதர் காட்டிற்குள் இருந்த ஒரு குட்டிச்சுவரில் விமல் அமர்ந்திருந்தான். கையில் செல்போன்.

"ஹலோ, நான் விமல் பேசுறேன். செல்வக் குமாரைக் கொன்றது நீதான்னு எனக்கு தெரியும். நானும் அந்த பெட்டியில் தான் இருந்தேன்.”

"............." மறுமுனை பேசியது கேட்கவில்லை.

"இப்ப நான் தாம்பரம் இரயில்வே ஸ்டேசனில் இருக்கேன். எப்பவும் இருக்க இடம் தான். உனக்குத் தெரியும்ல.”

”............."

"சரி வா.”

கை கட்டை விரலை உயர்த்திக் காட்டினான். சரியாக இருபது நிமிடங்கள் கழித்து வந்து நின்றான்,
சதீஷ் குமார்.
பயன்பாட்டில் இல்லாத இரயில் பெட்டிகளுக்குள் மறைந்திருந்த ஆல்டோவும், திருவும், கோபியும் வெளியே வந்தனர்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# அத்தியாயம் - 22

மறுநாள் சமூக வலைதளங்களில் இந்தச் செய்தி வைரலானது.

“பணம் கேட்டு தொல்லை கொடுத்த அண்ணனை இரயிலில் இருந்து தள்ளிக் கொலை செய்த தம்பி. துரிதமாக கண்டுபிடித்த போலிசாருக்கு உயரதிகாரிகள் பாராட்டு.”

தாம்பரம் முடிச்சூரில் வசித்து வருபவர் சதீஷ் குமார். பள்ளி மாணவராகிய இவர் தனது மொபைல் போனில் ஆபாசப் படங்களை வைத்திருந்துள்ளார். அதைக் கண்டுபிடித்த அவரது சகோதரர் செல்வக் குமார் பெற்றோரிடம் கூறிவிடுவதாக மிரட்டி பணம் கேட்டுள்ளார். அதைத் தனது தவறான பழக்கங்களுக்கும் பயன்படுத்தியுள்ளார். பலமுறை பொய்க்காரணம் கூறி பெற்றோரிடமும் நண்பர்களிடமும் பணம் பெற்று தனது சகோதரனுக்கு கொடுத்துள்ளார் சதீஷ் குமார்.
சம்பவத்தன்று இருவரும் ஒன்றாக இரயிலில் பயணம் செய்துள்ளனர். அப்போது செல்வக்குமார் மேலும் பணம் கேட்டு மிரட்டியுள்ளதாக தெரிகிறது. ஆத்திரமடைந்த தம்பி சதீஷ்குமார் அவரை ஓடும் இரயிலில் இருந்து தள்ளி விட்டுள்ளார். ஏற்கனவே பரங்கிமலை இரயில் நிலையத்தில் நிறைய விபத்துகள் நடந்துள்ளதால் இதையும் விபத்தென போலீஸ் விட்டுவிடுவர் என்று நினைத்துள்ளார். பிறகு எதுவும் தெரியாதது போல பள்ளிக்குச் சென்றுள்ளார். ஆனால் போலிசார் விசாரணையில் உண்மை வெளிவந்துவிட்டது.
சிக்கலான இந்த வழக்கில் விரைந்து செயல்பட்டு உண்மையை வெளிக்கொணர்ந்த கார்த்திக் ஆல்டோ தலைமையிலான சிறப்புப் படையினருக்கு உயரதிகாரிகள் பாராட்டு தெரிவித்தனர். மாணவர்களுக்கு மொபைல் போன்கள் கொடுப்பதை பெற்றோர்கள் தவிர்க்க வேண்டும், அவர்களது நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும் என காவல்துறை

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

ஆணையர் அறிவுறுத்தியுள்ளார்.

ஆயிரக்கணக்கான ஆங்கிரி, ஹாஹா சிம்பல்களுடன் பகிரப்பட்டு இருந்தது அந்தச் செய்தி. இன்ஸ்டண்ட் உளவியல் நிபுணர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் அறிவுரைகளை மழை போல பொழிந்திருந்தனர்.

24 மணி நேர செய்தித் தொலைக்காட்சிகளில் இந்நிகழ்வு தான் விவாதப் பொருளாக இருந்தது. எப்போதும் போல ராமசுப்பு, ஆபாசப் பட எதிர்ப்பாளர் என்ற பெயரில் பேசிக் கொண்டிருந்தார். “1990களில் விசிஆர் எனப்படும் ஒளிநாடா கேசட்களில் ஆபாசப் படங்களைப் பதிந்து அவற்றை வாடகைக்கு விட்டனர். பிறகு சிடி, டிவிடி வட்டுகள் வந்தன. அவற்றை பிரதி எடுப்பது எளிதாக இருந்ததால், எண்ணற்ற முறை பிரதி எடுக்கப்பட்டு பரவின. அதன் பின் இணையதள யுகம் வந்தது. பிரவுசிங் செண்டர்களில் வாலிபர்கள் தவம் கிடந்தனர். பிறகு பென் டிரைவ் போன்ற கையடக்க சேமிப்பு சாதனங்களின் மூலம் ஒரு நிமிடத்தில் காபி செய்யப்பட்டு பரிமாறப்பட்டன. மொபைல் ஃபோன்களின் வருகை இவை அனைத்தையும் புரட்டிப் போட்டது. கையகலக் கருவியில் நினைத்த போதெல்லாம் காணும் வசதியை கொடுத்தது.” மொபைல் ஃபோன், பென் டிரைவில் ஆரம்பித்து மல்டிமீடியா காலத்திற்கு முன் இருந்த மருதம், சரோஜா தேவி வரை தோண்டி எடுத்துப் பேசிக் கொண்டு இருந்தார்.

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

# பின் கதை

"எந்தக் க்ளூவுமே கிடைக்காம இருந்தோம். திடீர்னு எப்படி அவன் தம்பி மேல உங்களுக்கு சந்தேகம் வந்தது?" திரு ஆரம்பித்தார். ஆலந்தூர் சுக்குபாய் பிரியாணி ஹோட்டலில் வழக்கை வெற்றிகரமாக முடித்ததை மொத்தக் குழுவினரும் ஃபீப் பிரியாணியோடு கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

"நான் மாம்பலம் ஸ்டேசனில் வச்சு அவன் கிட்ட கேட்டப்போ //எனக்கு என்னமோ விமல்தான் செல்வாவை உதைச்சு கீழே தள்ளிருக்கனும்னு தோணுது சார்.// அப்படின்னு சொன்னான். செல்வக்குமாரை கீழ தள்ளி விட்டுட்டாங்கன்னு தான் நம்ம வெளில சொல்லிருந்தோம். உதைச்சது யாருக்குமே தெரியாது. வீடியோ பார்த்தவங்களுக்கு மட்டும் தான் தெரியும். இவனுக்கு எப்படி தெரிஞ்சது அப்படின்னு அப்பவே சந்தேகம் வந்தது. இவனும் ஸ்கூலுக்கு ஷூ தான் போட்டு போறான். பிறகு அந்த ரிச்சி மொபைல் கடைக்காரன் தம்பியோட வந்தான்னு சொன்னான். அப்போ இரண்டு பேரும் க்ரைம் பார்ட்னர்கள், செல்வக் குமார் செல்போனை வித்தது இவனுக்கு தெரியும். ஆனால் நம்ம கிட்ட சொல்லல. இவன் எதையோ மறைக்கிறான்னு தோணுச்சு. அதன் பிறகு தான் இரயில்வே ஸ்டேசன் சிசிடிவி வீடியோ எல்லாம் பார்தேன். தாம்பரம் ஸ்டேசனில் பள்ளி யூனிஃபார்ம் அணிந்த இரு மாணவர்கள் அந்தப் பெட்டியில் ஏறுவது தெரிந்தது. ஆனால் கிண்டி இரயில் நிலையத்தில் ஒரு பையன் சைலண்ட்டா அந்த பெட்டியில் இருந்து இறங்கி வேற

Click & Join - https://t.me/tamilbooksworld

If you want more free eBooks

பெட்டியில் ஏறுனான். அப்பவே உறுதி ஆயிடுச்சு. உடனே விமலை வச்சு ஒரு ஸ்கெட்ச் போட்டேன். சரியா நம்ம விரிச்ச வலையில் மாட்டிக்கிட்டான்." ஆல்டோ விவரித்தான்.

ஹோட்டலுக்கு வெளியே ஆலந்தூர் சுரங்கப்பாதை மீது, இது போன்ற எண்ணற்ற கதைகளை சுமந்து கொண்டு ஒரு மின்சார இரயில் தடக் தடக் என வேகமாக சென்று கொண்டிருந்தது.

Please write your reviews and feedbacks to senbalan@gmail.com

Click & Join - https://t.me/tamilbooksworld